SAMARASAM
சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-30 நவம்பர் 2026 ₹25
Volume : 47 Issue : 11
www.samarasam.net

நூல் கொள்முதல் சர்ச்சை:
ஊழல் ஒழிப்பும்
அறிவுப் பாதுகாப்பும்


காணாமல் போன
மாணவர்
மன்றங்கள்

மாறுகிறதா மத்திய கிழக்கின் வரைபடம்?



பள்ளிவாசல்கள் மீதான தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!







IFTயின் நூல்கள்


இப்போது மின்னூல்களாக (EPUB)

50 - 60%


சலுகை விலையில்...











இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்

138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012.

☎ 044 2662 4401 86680 57596

✉ iftchennai12@gmail.com 🌐 www.iftchennai.in















உள்ளே...

மாறுகிறதா மத்திய கிழக்கின் பாதுகாப்பு வரைபடம்?

8

● Dr.J. முஹையுதீன் MBBS MS MCh

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

7	சட்டத்தைக் கையிலெடுக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை | தலையங்கம்
12	பள்ளிவாசல்கள் மீதான தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் | சிராஜுதீன் M.A.
16	நவம்பர் 19 உலக கழிவறை தினம் : நாகரிகத்தின் தொடக்கம் மௌலவி ஹாஃபிழ் தா.முஹம்மது ஜுபைர் சித்தீகீ B.Com
19	நூல் கொள்முதல் சர்ச்சை: ஊழல் ஒழிப்பும் அறிவுப் பாதுகாப்பும் | ஐ.ஜுலாலுத்தீன்
24	நீங்கள் ஒரு வியாபாரியா? அல்லது சீர்திருத்தவாதியா? அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது
29	கோட்டக்குப்பம் அஞ்சுமன் நூலகம் நூற்றாண்டு விழா | சேயன் இப்ராகிம்
32	ஓர் இயக்கம் வெற்றி பெற தொண்டர் படை மட்டும் போதாது! சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி
36	காணாமல் போன மாணவர் மன்றங்கள் | மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ
40	மொகலாயர்கள் அந்நியர்களா? | சேயன் இப்ராகிம்
46	யாவரும் கேளிர் | பானு ஹமீத்

ஆசிரியர் - வெளியிடுபவர் : H.அப்துர் ரகீப்

பொறுப்பாசிரியர் : வி.எஸ். முஹம்மத் அமீன்

இதழ் வடிவமைப்பு : M. முஹம்மது அபூபக்கர்

படைப்புகளை அனுப்ப :
samarasam.article@gmail.com

சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :
M. அப்துல் காதர் 95661 53142

விளம்பரங்களை அனுப்ப :
samarasam.advt@gmail.com

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	:	ரூ.550
அரையாண்டு	:	ரூ.280
வெளிநாடு (ஓர் ஆண்டு)	:	ரூ.3500

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள், விளம்பரக் கட்டணங்களை அனுப்ப QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

தண்டிக்கப்பட வேண்டிய ஆணையர்

ஒரு நியாயமான தலைமைத் தேர்தல் ஆணையர் நீக்கப்பட்ட வாக்காளர்களின் மேல்முறையீட்டை தேர்தலுக்கு முன்பே தீர்த்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களின் நிலைமையை இக்கட்டில் வைத்து விட்டு தேர்தலை நடத்தியது வேண்டுமென்றே பாஜக வெற்றி பெற வழி செய்து விட்டது. மம்தா பானர்ஜி பழி வாங்கப்பட்டிருக்கிறார் என்றே தெரிகிறது. தலைமை தேர்தல் ஆணையரை பதவியை விட்டு விலக்குவதுடன் வழக்குத் தொடுத்து தண்டனைக்குள்ளாக்க வேண்டும். அதுவே இனி வரவிருக்கும் தேர்தல் ஆணையாளர்களுக்குத் தக்க பாடமாகவும் இருக்கும். RSS முழு பலத்தோடு தற்போது ஆட்சியில் அமர்ந்து விட்டது. பொருளாதாரம் பற்றிய அறிவு அவர்களுக்குக் கிடையாது. அவர்களின் கையாலாகத் தன்மையை மறைக்க முஸ்லிம் சமுதாயத் துடன் பிரச்னைகளை வளர்த்தே அரசு இயந்திரத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

- S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன்சத்திரம்

மாறும் உலகப் பொருளாதாரம்

அல்காரிதம் கட்டுரையில் அதன் நன்மைகளும் தீமைகளும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. போகிற போக்கைக் கவனித்தால் தீமைகள்தான் அதிகமாகி விடும் போலத் தெரிகிறது. அல்காரிதத் தகவல்களை அணுக வேண்டிய அறிவுரைகளை திருக் குர்ஆன், ஹதீஸ் வழியில் மனிதகுலம் பின் பற்ற வேண்டிய காலகட்டம் இது. ஏழை இந்துச் சகோதரியின் 2 வயது குழந்தையைக் காப்பாற்ற தில்லி ஜேஎம்ஆ பள்ளிவாசலில் தொழுகையாளிகள் 6 கோடியே 33 இலட்சம் இமாலயத் தொகை வழங்கியுள்ளது பாராட்டுக் குரியது. நெதர்லாந்தும் பிரான்ஸும் தங்கள் நாட்டுத் தங்கத்தை அமெரிக்க வங்கிகளிலிருந்து லண்டனுக்கு மாற்றியது, அமெரிக்கா மீது நம்பகத்தன்மை குறைவதைக் காட்டுகிறது. உலகப் பொருளாதாரம் ஒரு திருப்புமுனையை நோக்கி நகர்வதை கட்டுரை விளக்கியுள்ளது.

- ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

சிந்திக்க வைத்த கட்டுரை

பதவி விலகல் மட்டுமே நிச்சயம் தீர்வாகாது. ஏமன் முடிவில்லாத போரின் பின்னணியும் தீர்வும் கட்டுரை நடந்தவை நடந்து கொண்டிருப்பவை நடக்க வேண்டியவை எனப் பல விஷயங்களைக் கூறியதோடு தீர்வும் நேர்த்தியாக இருந்தது. நிம்மதியா அமைதியா மிகவும் சிந்திக்க வைத்தது. சோம் பல் என்ற ஒற்றை வார்த்தை எவ்வளவு பெரிய இடர்களைத் தருகின்றது என்று விளக்கிய விதம் அருமை. கொல்லும் நஞ்சு கவிதை குடியால் ஏற்படும் அவலங்களை அழகாய் எடுத்தியம்பியது. என்றுமே இஸ்லாம் மனித நேயத்தை மனம் ஒன்றிச் செய்யும் என்பதை உணர்த்தியது இந்துக் குழந்தையின் உயிர் காக்க உதவிய ஜேஎம்ஆ பள்ளிவாசல் நிகழ்வு.



- சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

எப்படி அகற்ற முடியும்?

தீயநோக்கத்தோடு ஆட்சிக் கட்டிலில் இருக்கும் பாஜகவை அகற்ற மக்கள் வாக்கால் மட்டுமே முடியும். தேர்தல்தான் முடிவும். ஆனால் தேர்தலில், வாக்கில் திருட்டுத்தனத்தைக் கையாண்டால் எப்படி அவர்களை அகற்ற முடியும்? நிம்மதியா, அமைதியா? கட்டுரையை ஆழ்ந்து சிந்தித்தால் ஒரு மனிதன் சிறப்பாக வாழ முடியும். முஸ்லிம் மன்னர் ஆட்சியில் எவ்வளவோ நல்ல காரியங்கள் நடந்தாலும் குறைகள், தவறான குற்றச் சாட்டுகளைப் பெரிதாக்குவது அறிவீனம். கொல்லும் நஞ்சு, தீண்ட அஞ்சு கவிதை அருமை. இந்துச் சிறுமியை காப்பாற்ற முன்வந்த தில்லி பள்ளி வாசலைச் சேர்ந்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

- இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

நேர்மையான கேள்வி

பதவி விலகல் மட்டுமே தீர்வாகுமா? சரியான, நேர்மையான கேள்வி! ஆனால் இந்தக் கேள்வி அரசை எட்டுமா? எட்டினாலும் பதில் சொல்லுமா? அல்காரித உலகில் உண்மைகளைத் தேடி கட்டுரை சமூக வலைதளங்களின் உலகிற்குள் நாம் மூழ்கி விட்டோமோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. உண்மைகளைத் தேட வேண்டிய நாம் அல்காரிதங்கள் காட்டும் தகவல்களுக்குள் சிக்கிக்கொண்டு, உண்மையைப் பகுத்தறியும் திறனை இழந்து விடுகிறோமோ? சிந்திக்க வைத்தது.

- சாஜிதா ஹஸீப், திருச்சி

தென்றல் போல நடை

அ.நஜ்முத்தீன் எழுதிய 'நிம்மதியா? அமைதியா? எது அதிகம் தேவை' கட்டுரை படித்தேன். மலர்வனத்தைத் தழுவிச் செல்லும் தென்றலைப் போல எளிய நடையில் நிம்மதிக்கும் அமைதிக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை சிறப்பாகக் குறிப்பிட்டு அமைதிக்கு வழிகாட்டிய விதம் அருமை. இட்டுக் கட்டி வரலாற்றைத் திசை திருப்பும் பேரழிவு சக்திகளுக்கு எதிராக சேயன் இப்ராகிம் மொகலாய மன்னர் ஔரங்கஜேப் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு ஆதாரங்களுடன் பதில் கூறியிருப்பது பாராட்டுக்குரியது. சிறார் உலகத்தில் விண்ணை நோக்கி பாடலும் அதற்கான படமும் மிக நேர்த்தியான அச்சுக் கலவையில் ஒளிர்ந்தது.

- சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

ஜனநாயக உரிமை

பதவி விலகல் மட்டுமே தீர்வாகுமா? தலையங்கம் சிறப்பு. நேர்மையான ஆட்சியாளர்களால் மட்டுமே மக்களாட்சியைப் பாதுகாக்க முடியும். தாங்கள் விரும்பும் ஆட்சியைக் கொண்டு வர நியமிக்கப்பட்டவரே ஞானேஷ்குமார். அவர் எப்படி நியாயமாகச் செயல்படுவார்? போராட்டம் ஜனநாயக உரிமை. போராட்டம் வெல்ல வேண்டும்.

- கவிஞர் காசீம், கடையநல்லூர்

வாகை சூடிய ஈகைக் குணம்

ஆடுகின்றவனை மட்டுமின்றி ஆட்டுவிப்பவனை விரட்ட வேண்டும் என்ற தலையங்கச் செய்தி அருமை. தில்லி ஜூம்ஆ பள்ளிவாசலில் வாகை சூடிய ஈகைக் குணம் பாராட்டுக்குரியது. நிம்மதி இருந்தால் அமைதி இல்லை. அமைதி இருந்தால் நிம்மதி இல்லை. இவ்விரண்டும் இணையும் போது வாழ்வு முழுமை பெறுகிறது.

- எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை

முன்மாதிரிச் செயல்

ஏழை இந்துச் சகோதரியின் துயர்துடைத்த புதுதில்லி ஜூம்ஆ பள்ளியின் செயல் பாராட்டுக்குரிய முன்மாதிரிச் செயல். நிம்மதி பிரச்னைகள் இல்லா நிலை. மனிதனை ஆழமாகக் காப்பது அமைதியே. நிம்மதி இல்லாமல் இருக்கலாம். அமைதியின்றி இருக்க முடியுமா? அமைதிக்கும், நிம்மதிக்கும் இடையேயுள்ள நுட்பமான வேறுபாட்டை நஜ்முத்தீன் சிறப்பாக விளக்கியிருந்தார். SIR மூலம் 13.39 கோடிப்பேர் நீக்கப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு பொறுப்பேற்று ஞானேஷ் குமார் பதவி விலகியிருக்க வேண்டும். அவர் பதவியில் நீடித்திருப்பது அழகல்ல.

- S. அஜித்தா, M. லைலாம்மா, S. மகுதனன், தேனி

வாக்குச்சீட்டு முறை வேண்டும்

தேர்தல் ஆணையர் பதவி விலகுவதால் அனைத்துப் பிரச்னைகளும் தீர்ந்து விடாது என்பதை தலையங்கம் விரிவாக அலசியிருந்தது சிறப்பு. அனைவருக்கும் சென்று சேர வேண்டிய செய்தி. மின்னணு முறையை விடுத்து வாக்குச் சீட்டு முறையைக் கொண்டு வரவேண்டும்.

- ஜே. மஃரூப், குலசேகரன்பட்டிணம்

தொற்றிக்கொள்ளும் சுறுசுறுப்பு

மயக்கும் வெளி உலகில் எப்படி நிம்மதி அடையப் பெறுவது? தன்னுள் அமைதியை வைத்திருப்பவரே நிம்மதியைத் தரவும்

பெறவும் முடியும். ஔரங்கஜேப் குறித்த குற்றச்சாட்டுக்கு சேயன் இப்ராகிமின் பதில் சிறப்பு. சோம்பல் அனைவரையும் எரிச்சல டையச் செய்யும், சுறுசுறுப்பு அனைவரையும் பற்றிக் கொள்ளும் என்ற வாழ்க்கைப் பாடம் அருமை.

- ப.குருசாமி, தேனி

மக்கள் நல அரசை எப்படித் தர முடியும்?

வாக்காளர்களின் உளக் குமுறல்களை தலையங்கம் எடுத்துரைத்தது. தீய நோக்கங் களுடனும், திட்டங்களுடனும் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களால் எப்படி மக்கள் நல அரசைத் தரமுடியும்? நீக்கப்பட்ட 27.16 இலட்சம் வாக்காளர்கள் மீண்டும் சேர்க்கக் கோரிய போது ஏன் சேர்க்கவில்லை? இந்துச் சகோதரிக்கு வாரி வழங்கிய சகோதரர்கள் சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பதை உலகிற்கு உணர்த்தி விட்டார்கள்.

- மானூர் மைந்தன், பழனி

www.samarasam.net

சமரசம்

மாதம் இருமுறை இதழ்

பரப்புரை இயக்கம்



2026 டிசம்பர் 1 – 31 வரை

ஆலிம்கள்
சிறப்புச் சலுகை
ஆண்டுச் சந்தா ~~550~~ 300





வாசகர்
சிறப்புச் சலுகை
ஆண்டுச் சந்தா
~~550~~ 450

எழுத்தாளர்
சிறப்புச் சலுகை
ஆண்டுச் சந்தா ~~550~~ 400

சமரசம் இதழில் உங்கள் கட்டுரையோ வாசகர் கடிதமோ ஒரு முறையேனும் இடம் பெற்றிருந்தால் நீங்கள் இந்தச் சலுகையைப் பெறலாம்.

வங்கி விவரம் :

Creative Communication Chennai A/c No. 30705346015
State Bank of India, Jamalia Branch, IFS Code - SBIN0014623
Gpay : 9566153142



தொடர்புக்கு :

சமரசம், 138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12.
• 044-2662 0091 • 95661 53142 • samarasam12@gmail.com • www.samarasam.net

சரம் : 47
மலர் : 11

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ஜமாதில் ஆகிர் 6-20 ● 2026 நவம்பர் 16-30

சட்டத்தைக் கையிலெடுக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை கிழக்குத் தெருவைச் சேர்ந்த 25 வயதான ரிஸ்வான் ஆஷிக் ரஹ்மான் 2026 நவம்பர் 1ஆம் தேதி கீழக்கரை 500 பிளாட் பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார். அங்குள்ள பெண்கள் கூச்சலிடவே அருகிலுள்ள வர்கள் விரைந்து வந்து ரிஸ்வான் ஆஷிக் ரஹ்மானைப் பிடித்து அடித்துள்ளனர். பலத்த தாக்குதலுக்கு உள்ளான அவரை வீதிக்கு இழுத்து வந்து கை, கால்களைக் கட்டிவைத்து பொதுமக்கள் முன்னிலையில் அடித்துத் துன்புறுத்தினர். இந்த வீடியோ சமூக வலைதளங் களில் பரவியது.

தகவலறிந்த காவல்துறையினர் அவரை மீட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். சிகிச்சை பலனின்றி ரிஸ்வான் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கீழக்கரை 500 பிளாட் பகுதியைச் சேர்ந்த சீனி ஹமீது, ஹாஜா முஹைதீன், அமீர் அப்துல்லா, முஹம்மது ஆதில், புதுத்தெரு நூர் முஹம்மது ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் கீழக்கரையில் நடுவீதியில் பொதுமக்கள் முன்னி லையில் ஓர் இளைஞன் அடித்துக் கொல்லப்பட்டிருப்பது சாதாரண நிகழ்வு அல்ல. நிரூபிக்கப்படாத திருட்டுக் குற்றத்திற்காக ஓர் இளைஞன் படுகொலை செய்யப்பட்டிருப்பது பெரும் வேதனையையும், கவலையையும் ஏற்படுத்துகிறது.

அந்த இளைஞன் திருடுவதற்காகவோ, பெண்களிடம் தவறாக நடந்து கொள்ளச் சென்றதாகவோ குற்றம் சாட்டப்படும் நிலையில் குற்றத்தை முறையாக விசாரிக்காமலேயே அடித்துத் துன்புறுத்துவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள இயலாது. ஒருவேளை அந்த இளைஞன் குற்றச் செயலில் ஈடுபட்டால் அவரைப் பிடித்து காவல்துறையில் ஒப்படைக்க வேண்டும். காவல்துறையினருமே அடித்துக் கொல்வதற்கு அதிகாரம் பெற்றவர்கள் அல்ல. சட்டத்தைக் கையிலெடுத்துத் தண்டிப்பதற்கு இங்கு எவருக்கும் உரிமை இல்லை.

நிராயுதபாணியாக வந்த இளைஞனைக் கை, கால்களைக் கட்டி வைத்து உயிர் போகும் அளவிற்குக் கொடூரமாகத் தாக்கும்போது அதைத் தடுப்பதற்கு ஒருவருமா அங்கு இல்லை? அடித்துக் கொல்வதையும், வேடிக்கை பார்க்கும் மனநிலையையும் இவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? அந்த இளைஞனைத் தாக்கியவர்கள் மட்டுமின்றி அருகிலிருந்து அடிக்கச் சொல்பவர்கள், வேடிக்கை பார்ப்பவர்கள் அனைவருமே இக்கொலைக்கு ஒருவகையில் காரணமாகியிருக்கின்றார்கள்.

கொலை செய்யப்பட்ட இளைஞன் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி அதிலிருந்து மீண்டு வருவதாகச் சொல்லப்படும் சூழலில் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. இப்படு கொலை குறித்து நேர்மையான விசாரணை நடைபெற்று உண்மையான குற்றவாளிகள் கடுமை யாகத் தண்டிக்கப்பட வேண்டும். முஸ்லிம் சமுதாயம் இந்த நிகழ்வை எளிதில் கடந்து செல்லாமல் இளைஞர்களை போதையிலிருந்து மீட்டெடுப்பதற்கும், அடித்துக் கொல்லும் கொடூர மனநிலையிலிருந்து ஒரு தலைமுறையைக் காப்பதற்கும் கவனம் செலுத்த வேண்டும்.

மாறுகிறதா மத்திய கிழக்கின் பாதுகாப்பு வரைபடம்?

● Dr.J. முஹையுதீன் MBBS MS MCh

மத்திய கிழக்கின் அரசியல் வரலாற்றில் சில சந்திப்புகள் உடனடியாகப் பெரிய ஒப்பந்தங்களை உருவாக்குவதில்லை. ஆனால் எதிர்காலம் எந்தத் திசையில் நகரக்கூடும் என்பதற்கான அடையாளங்களை அவை விட்டுச் செல்கின்றன. அண்மையில் ஈரானிலும் கத்தாரிலும் நடந்துவரும் தொடர் சந்திப்புகள் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை.

சவூதி அரேபியா, துருக்கி, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைக் கொண்ட மக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தின் (Makkah Alliance) முக்கிய பிரதிநிதிகள் ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்குச் சென்றது, அதைத் தொடர்ந்து கத்தாரின் தீவிர மத்தியஸ்த முயற்சிகள், பின்னர் ஈரானியப் பிரதிநிதிகள் தோஹாவுக்குச் சென்றது. ஓமான் முன்வைத்திருக்கும் யோசனை ஆகிய அனைத்தையும் தனித் தனி நிகழ்வுகளாக மட்டும் பார்க்க முடியாது.

மாறாக மத்திய கிழக்கின் பாதுகாப்பை யார் நிர்ணயிப்பது? என்ற பழைய கேள்விக்கு அந்நாடுகளே புதிய பதிலைத் தேடத் தொடங்கியிருக்கின்றனவா என்ற கேள்வியை இவை எழுப்புகின்றன.

தெஹ்ரானில் மக்கா கூட்டணி

அக்டோபர் 26 அன்று சவூதி பாதுகாப்பு அமைச்சர் இளவரசர் காலித் பின் சல்மான், பாகிஸ்தான் இராணுவத் தலைவர் ஃபீல்ட் மார்ஷல் ஆசிம் முனீர், துருக்கியின் உளவுத் துறைத் தலைவர் இப்ராஹீம் கலின் ஆகியோர் தெஹ்ரானில் ஈரானின் மூத்த அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஈரான் தரப்பில் தேசிய பாதுகாப்புக் கவுன்சிலின் செயலாளர் மொஹ்சென் ரெசாயி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். வளைகுடா பகுதியின் பதற்றத்தைக் குறைப்பதும் கத்தார், பாகிஸ்தான் மேற்கொள்ளும் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதும் இந்தப் பயணத்தின் நோக்கங்களில் அடங்கும் என செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின் முக்கியத்துவம் அதில் கலந்து கொண்ட நபர்களின் பதவிகளில் மட்டும் இல்லை. சந்தித்த நாடுகளின் அரசியல் பின்னணியிலும் இருக்கிறது. சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையே பல ஆண்டுகளாக நிலவும் பனிப் போர், துருக்கியின் நேட்டோ(NATO) தொடர்பு,



பாகிஸ்தான் - அமெரிக்கா தொடர்பு எனப் பல்வேறு முரண்பாடுகள் கொண்ட மூன்று நாடுகளின் முக்கிய பாதுகாப்புப் பிரதிநிதிகள் ஒரே நேரத்தில் தெஹ்ரானுக்குச் சென்று ஈரானுடன் பாதுகாப்பு குறித்துப் பேசுவது சாதாரண நிகழ்வு அல்ல.

அதுவும் 2026 பிப்ரவரி 28 அன்று தொடங்கிய அமெரிக்க-இஸ்ரேலிய தாக்குதல்கள், ஈரானின் பதிலடிகளுக்குப் பின்னர் மத்திய கிழக்கு பெரும் பாதுகாப்பு நெருக்கடிக்குள் சிக்கியுள்ள சூழலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

எங்கள் பாதுகாப்பை நாங்களே தீர்மானிக்க வேண்டும்

தெஹ்ரான் சந்திப்பிலிருந்து வெளிப்படும் மிக முக்கியமான அரசியல் செய்தி இதுதான்.

❖ மத்திய கிழக்கின் பாதுகாப்பு என்பது அமெரிக்கா அல்லது வேறு வெளிநாட்டு வல்லாதிக்க நாடுகளின் இராணுவக் குடையின் கீழ் மட்டுமே அமைய வேண்டுமா? அல்லது வளைகுடா நாடுகள் தங்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை மறந்து தங்களுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பைத் தாங்களே உருவாக்க முடியுமா?

❖ ஈரான் நீண்ட காலமாக இந்த கருத்தை வலியுறுத்தி வருகிறது. தெஹ்ரான் சந்திப்புக்குப் பிறகும் ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் நாடுகளுடன்(GCC) ஈரானுக்கு பகைமை இல்லை என்றும் கத்தார், ஓமானின் பங்களிப்பை மதிப்பதாகவும் சவூதி அரேபியாவுடன் உரையாடல் தொடர்வதாகவும் கூறினார். வெளி நாட்டு இராணுவ இருப்பைச் சாராத புதிய பிராந்தியப் பாதுகாப்பு ஏற்பாடுகளே தமது இலக்கு என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இங்கே ஒரு முக்கியமான வேறுபாட்டை மறந்துவிடக் கூடாது. தெஹ்ரான் சந்திப்பு நடைபெற்றுவிட்டதால் மக்கா கூட்டணியும் ஈரானும் ஒரே பாதுகாப்புக் கூட்டணியாகி விட்டன என்று கூற முடியாது. அத்தகைய ஒப்பந்தம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. சவூதியின் அமெரிக்கப் பாதுகாப்பு உறவுகள் தொடர்கின்றன. துருக்கி நேட்டோவில் உள்ளது. பாகிஸ்தானுக்கும் பல வல்லாதிக்க நாடுகளுடன் தனித்தனி உறவுகள் உள்ளன. எனவே இது உடனடியான கூட்டணி மாற்றம் அல்ல. ஆனால் பேச முடியாதவர்கள் பேசத் தொடங்கியிருப்பது அரசியலில் சிறிய மாற்றமல்ல.

தெஹ்ரானிலிருந்து தோஹாவுக்கு வந்த ஈரானியக் குழு

அக்டோபர் 31 அன்று ஈரானிய வெளியுறவு அமைச்சரின் துணை அதிகாரி உள்ளிட்ட பிரதிநிதிகள் கத்தார் தலைநகர் தோஹாவுக்கு வந்தனர். அமெரிக்காவுடனான மறைமுகப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. முன்னதாகத் தெஹ்ரானில் நடைபெற்ற ஆலோசனைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன. நவம்பர் 1 வரை மூன்று நாள்களாகத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளில் இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை.

ஒருபுறம் போர் தீவிரமடையும் அபாயம்; மறுபுறம் அமைதிக்கான முயற்சி. இதுவே இன்றைய மத்திய கிழக்கின் முரண்பாடான நிலை. அமைதி இன்னும் ஒப்பந்தமாக மலரவில்லை; ஆனால் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் இன்னும் மூடப்படவில்லை.

ஹோர்முஸ் – உலகப் பொருளாதாரத்தின் முடிச்சு

இந்தப் பேச்சுவார்த்தையை ஈரான் – அமெரிக்கா அரசியல் மோதலாக மட்டும் பார்த்தால் அதன் முழுப் பொருளை உணர முடியாது. ஹோர்முஸ் நீரிணை உலக எரி சக்தி போக்குவரத்தின் மிக முக்கியமான வழித்தடங்களில் ஒன்று. அங்கு ஏற்படும் நீண்ட கால நெருக்கடி வளைகுடா நாடு களை மட்டுமல்ல; ஆசியா, ஐரோப்பா உள் ளிட்ட உலகின் பல பகுதிகளின் எண்ணெய் விநியோகம், கப்பல் போக்குவரத்து, காப் பீட்டுச் செலவு, எரிபொருள் விலை ஆகிய வற்றையும் பாதிக்கக்கூடும்.

அதனால்தான் ஹோர்முஸ் நீரிணை பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. ஈரான் முன்வைக்கும் நிபந் தனைகளும் அமெரிக்கா முன்வைக்கும் அணுசக்தி தொடர்பான கோரிக்கைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக் கின்றன. எனவே இந்தப் பேச்சுவார்த்தை யில் வெற்றி கிடைத்தால் அதன் பலன் தெஹ் ரானுக்கும் வாஷிங்டனுக்கும் மட்டும் அல்ல. எண்ணெயை இறக்குமதி செய்யும் இந்தியா போன்ற நாடுகளுக்கும், உலகக் கப்பல் போக்குவரத்துக்கும், சர்வதேச சந்தைகளுக் கும் அதன் தாக்கம் இருக்கும்.

ஓமானிலிருந்து வந்த இன்னொரு முக்கியக் குரல்

இந்தச் சூழலில்தான் ஓமான் வெளியுறவு அமைச்சர் பத்ர் அல்புஸைதி முன்வைத்துள்ள யோசனை முக்கியத்துவம் பெறுகிறது. ச வூதி அரேபியா, பஹ்ரைன், குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், ஓமான் ஆகிய ஆறு வளைகுடா நாடுகளுடன் ஈராக், ஈரானும் இணைந்து ஒரு வகை பிராந்தியப் பாதுகாப்பு உடன்பாட்டை Regional Defence Pact உரு வாக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

‘வளைகுடாவின் பாதுகாப்பை எப் போதும் வெளிநாட்டு வல்லாதிக்க நாடுகளே தீர்மானிக்க வேண்டும் என்ற நிலை நீடிக்க முடியாது; பிராந்திய நாடுகளே தங்களுடைய பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்க வேண்டும்.’ என்பதே அவருடைய வாதம். இந்த யோசனை மேலும் விரிவுபடுத்தப்பட்டால் பாதுகாப் புடன் பொருளாதார ஒத்துழைப்பும் இணைக்கப் படலாம் என்ற பார்வையும் ஓமானிடமிருந்து வந்துள்ளது. ஈரானை முற்றிலும் விலக்கிவிட்டு வளைகுடாவில் நிலையான பாதுகாப்புக் கட்ட மைப்பை உருவாக்குவது கடினம் என்பதே இந்த அணுகுமுறையின் அடிப்படை.

ஒரு புறம் மக்கா பாதுகாப்புக் கூட்டணி; மற்றொரு புறம் ஈரான். நடுவில் கத்தார், ஓமான் போன்ற நாடுகள். இவை அனைத்துக் கும் பின்னால் அமெரிக்கா, இஸ்ரேல், சீனா, ரஷ்யா போன்ற பெரிய சக்திகளின் நலன் களும் இருக்கின்றன. ஆனால் முதன் முறை யாகத் தெளிவாக ஒலிக்கத் தொடங்கியிருக் கும் கேள்வி:

- வளைகுடாவின் எதிர்காலப் பாது காப்பை வளைகுடா, அதன் அண்டை நாடு களே சேர்ந்து வடிவமைக்க முடியாதா?
- சவூதி – ஈரான் உறவில் புதிய அத்தியாயமா?



ஏமன் முதல் லெபனான் வரை, சிரியா முதல் வளைகுடா அரசியல் வரை சவூதி அரேபியாவும் ஈரானும் கடந்த பல ஆண்டுகளாக எதிரெதிர் பக்கங்களில் தான் நின்றுள்ளன. அந்த வரலாறு ஒரே சந்திப்பில் அழிந்து விடாது. ஆனால் அதே நேரத்தில்

போர் விரிவடைந்தால் அதற்கான விலையை முதலில் செலுத்த வேண்டியவர்கள் இந்த நாடுகளே என்பதும் இப்போது மேலும் தெளிவாகியுள்ளது. எண்ணெய் நிலையங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், கப்பல் வழிகள், அமெரிக்கத் தளங்கள் அமைந்துள்ள நாடுகள் என அனைத்தும் நேரடியாக பாதிக்கப் படக்கூடும். அதனால் எதிரியை தனிமைப்படுத்துவது என்ற பழைய அரசியல் கணக்குடன், எதிரியுடன் பேசித் தீயை அணைப்பது என்ற நடைமுறைத் தேவையும் இன்று இணைந்துள்ளது.

அமெரிக்கா வெளியேறுகிறதா?

இங்கே மற்றொரு தவறான முடிவுக்கும் செல்லக்கூடாது. மத்திய கிழக்கிலிருந்து அமெரிக்காவின் செல்வாக்கு முடிவுக்கு வருகிறது என்று இப்போதே கூறுவதற்கு ஆதாரம் இல்லை. சவூதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகளின் அமெரிக்க உறவுகள் ஆழமானவை. துருக்கி நாடோ நேட்டோ உறுப்பினர். கத்தாருக்கும் அமெரிக்காவுக்கும் முக்கியமான பாதுகாப்பு உறவுகள் உள்ளன.

எனவே தற்போது உருவாகிவருவது அமெரிக்காவை முழுமையாக வெளியேற்றும் புதிய கூட்டணி என்று கூறுவதைவிட வெளிநாட்டு வல்லாதிக்க நாடுகளை மட்டுமே சார்ந்திருக்காமல், பிராந்திய நாடுகளுக்கிடையேயான நேரடி உரையாடலுக்கும் அதிக இடம் உருவாக்கும் முயற்சி என்று கூறுவதே பொருத்தமானது.

போரைத் தவிர்க்க முடியுமா?

இதற்கான பதில் இன்னும் இல்லை. ஈரானின் அணுசக்தித் திட்டம், அமெரிக்கத் தடைகள், ஹோர்முஸ் நீரிணை தடை, எண்ணெய் ஏற்றுமதி, பிராந்திய ஆயுதக் குழுக்கள், ஏமன் மோதல், இஸ்ரேல்-ஈரான் பகைமை எனப் பல சிக்கல்கள் ஒன்றோடொன்று பின்னப்பட்டுள்ளன. அவற்றை ஒரு மாநாட்டிலோ, ஒரு வாரப் பேச்சுவார்த்தையிலோ தீர்த்துவிட முடியாது.

“தற்போது உருவாகிவருவது அமெரிக்காவை முழுமையாக வெளியேற்றும் புதிய கூட்டணி என்று கூறுவதைவிட வெளிநாட்டு வல்லாதிக்க நாடுகளை மட்டுமே சார்ந்திருக்காமல், பிராந்திய நாடுகளுக்கு இடையேயான நேரடி உரையாடலுக்கும் அதிக இடம் உருவாக்கும் முயற்சி என்று கூறுவதே பொருத்தமானது.”

ஆனால் இன்னொரு உண்மையையும் மறுக்க முடியாது. சில வாரங்களுக்கு முன்பு வரை நடக்கவே நடக்காது எனத் தோன்றிய பல நடவடிக்கைகள் தற்போது சாத்தியப் பட்டுள்ளது. மத்திய கிழக்கின் அரசியல் வரலாற்றில் எதிரிகள் ஒருவரை ஒருவர் சந்திக்க மறுக்கும் காலத்தைவிட, ஒரே மேசையில் அமர்ந்து கடினமான கேள்விகளைப் பேசத் தொடங்கும் காலமே மாற்றத்தின் தொடக்கமாக இருந்திருக்கிறது.

இதுவே தற்போதைய நம்பிக்கையின் சிறிய விதை. அண்மைய அமெரிக்க இஸ்ரேலிய தேர்தல் முடிவுகள் இந்த நம்பிக்கைக்கு உரமூட்டுவது போல் உள்ளது. இது எதிர்கால அமைதிக்கு இடப்படுகின்ற பாதை. அந்தப் பாதை நிரந்தர அமைதியை நோக்கிச் செல்லுமா, அல்லது மீண்டும் பழைய பகைமையின் சுவரில் முட்டி நிற்குமா என்பதை வரவிருக்கும் வாரங்களும் மாதங்களுமே தீர்மானிக்கும்.

ஆனால் ஒரு விஷயம் மட்டும் தெளிவாகிறது. மத்திய கிழக்கின் பாதுகாப்பு வரைபடம் மீண்டும் விவாத மேசையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த முறை அந்த மேசையைச் சுற்றி அப்பிராந்திய நாடுகளின் நாற்காலிகள் அதிகரித்திருக்கின்றன. நல்லதே நடக்க வேண்டும் என நாமும் பிராத்திப் போம்.

பள்ளிவாசல்கள் மீதான தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

– சிராஜுதீன் எம்.ஏ.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் பொருளாதார முன்னேற்றத்தால் மட்டுமே அளவிடப்படுவதில்லை. அச்சமூகத்தில் வாழும் மக்கள் ஒருவரையொருவர் எவ்வாறு மதிக்கிறார்கள், வெவ்வேறு மதங்களையும் நம்பிக்கைகளையும் எவ்வாறு அணுகுகிறார்கள், கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் எவ்வாறு ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள் என்பதிலும்தான் அதன் உண்மையான வளர்ச்சி அடங்கியிருக்கிறது.

தமிழ்நாடு நீண்டகாலமாகப் பல்வேறு மதங்களையும் மொழிகளையும் கலாசாரங்களையும் சேர்ந்த மக்கள் இணைந்து வாழும் மண்ணாகத் திகழ்கிறது. இந்த மண்ணின் சமூக வாழ்வில் மத நல்லிணக்கத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் முக்கியமான இடம் உண்டு. இத்தகைய சூழலில், வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் மக்களிடையே கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன.

அண்மையில் சென்னை வடபழனி பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் பொருட்கள் சேதப்படுத்தப்பட்ட சம்பவமும், கோயம்பேடு ஜெய் நகர் பகுதியில் உள்ள பள்ளிவாசலில் இமாம் தாக்கப்பட்டதாகவும் பொருட்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் வெளியான செய்திகளும் கவனத்திற்குரியவை. வடபழனி சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும், அவர் தொடர்பாக மனநலச் சிகிச்சை உள்ளிட்ட பின்னணிகளைப் போலீசார் விசாரித்ததாகவும் செய்திகள் வெளியாகின. கோயம்பேடு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர் குறித்தும், சம்பவத்தின் பின்னணி குறித்தும் விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று சமுதாயத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களின் பின்னணி எதுவாக இருந்தாலும் வழிபாட்டுத் தலங்களுக்குள் அத்துமீறி நுழைந்து பொருட்களைச் சேதப்படுத்துவதும், அங்கு பணியாற்றுபவர்களைத் தாக்குவதும் கண்டிக்கத்தக்க செயல்களாகும். இத்தகைய சம்பவங்களில் உண்மையை முழுமையாகக் கண்டறிந்து ஆதாரங்களின் அடிப்படையில் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது அவசியம்.

முஸ்லிம் சமுதாயத்தின் பொறுப்புகள்

அநீதி நிகழும்போது அதற்கு எதிராகக் குரல் கொடுப்பது அவசியம். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நிற்பதும், சம்பவத்தின் உண்மையை வெளிக்கொணரக் கோருவதும், குற்றத்தில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவதும் சமுதாயத்தின் உரிமையும் பொறுப்புமாகும். நமது எதிர்ப்பு சட்டத்தின் வரம்புக்குள் இருக்க வேண்டும். ஜனநாயக முறையில் கண்டனத்தை வெளிப்படுத்தலாம்; காவல் துறை, அரசிடம் முறையிடலாம். அமைதியான முறையில் போராட்டம் நடத்தலாம். இவற்றில் எந்தச் செயலிலும் வன்முறைக்கோ, தனிநபர் தாக்குதலுக்கோ, பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்துவதற்கோ இடமளிக்கக் கூடாது.



தவறைத் திருத்தும் போதும், அநீதிக்கு எதிராகச் செயல்படும் போதும் நிதானத்தையும் அறிவையும் இழக்கக் கூடாது என்பதே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். நமது எதிர்ப்பு நீதியை நிலைநாட்ட வேண்டும்; நமது நிதானம் இஸ்லாத்தின் அழகிய முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும்.

தலைவர்களின் பொறுப்பு

இத்தகைய சம்பவங்கள் நிகழும்போது சமுதாய, அரசியல் தலைவர்கள் பொறுப்புடன் செயல்படுவது அவசியம். பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்களுக்கு நேரில் சென்று நிர்வாகிகளிடம் சம்பவத்தின் விவரங்களைக் கேட்டறிவது, காவல்துறை அதிகாரிகளைச் சந்தித்து முறையான விசாரணை கோருவது, அரசிடம் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலியுறுத்துவது போன்ற செயல்கள் முக்கியமானவை.

அண்மைச் சம்பவங்களுக்குப் பின்னர் சில சமுதாயத் தலைவர்கள் காவல்துறை உயர் அதிகாரிகளைச் சந்தித்து, நியாயமான விசாரணை, வழிபாட்டுத் தலங்களுக்கான பாதுகாப்பு குறித்து கோரிக்கை வைத்தனர். இத்தகைய பொறுப்பான அணுகுமுறை வரவேற்கத்தக்கது. அனைத்து சமூகத் தலைவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும், உண்மையை வெளிக்கொணரவும், சமூக அமைதியைப் பாதுகாக்கவும் முன்வர வேண்டும். அறிக்கைகள் வெளியிடுவதோடு நின்றுவிடாமல், களத்தில் இறங்கி மக்களுடன் உரையாடி, பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும்.

வழிபாட்டு உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

ஒருவருடைய மத நம்பிக்கையை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும் அவரவர் உரிமை. ஆனால் மற்றொரு வருடைய வழிபாட்டு உரிமையை மதிப்பது கடமை. பள்ளிவாசல், கோயில், தேவாலயம் என எந்த வழிபாட்டுத் தலமாக இருந்தாலும் அவற்றின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.



1791ஆம் ஆண்டு மராத்தியப் படையெடுப்பின்போது கர்நாடக மாநிலத்தின் சிருங்கேரி சாரதா பீடம் தாக்கப்பட்டு, அங்கிருந்த சாரதா தேவியின் திருவுருவம் சேதப்படுத்தப்பட்டதாகவும், பீடத்தின் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அப்போது மைசூர் அரசை ஆண்ட திப்பு சுல்தான், சிருங்கேரி மடத்தின் தலைவருக்குக் கடிதம் எழுதியதுடன், சாரதா தேவியின் திருவுருவத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்வதற்கான நிதி, பொருட்களையும் வழங்கியதாகச் சிருங்கேரி பீடத்தின் வரலாற்றுக் குறிப்புகள் பதிவு செய்கின்றன.

இந்த வரலாற்று நிகழ்வை நாம் நினைவு கூர்வதன் நோக்கம் ஒரு மன்னரைப் பற்றிய முழுமையான மதிப்பீட்டை முன்வைப்பதல்ல. மாறாக பிற மதத்தைச் சேர்ந்தவர்களின் வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாப்பதில் ஆட்சியாளர்கள் காட்ட வேண்டிய பொறுப்பைச் சுட்டிக்காட்டுவதாகும். ஒருவரின் வழிபாட்டு உரிமையை மதிப்பது அவரது மதத்தைச் சேர்ந்தவர்களுக்கான கடமை மட்டுமல்ல; அது மனிதநேயத்திற்கும் நாகரிகத்திற்கும் அடையாளமாகும்.

இளைஞர்களின் பொறுப்புகள்

இன்றைய காலத்தில் சமூக வலைதளங்கள் தகவல்களை மிக வேகமாகப் பரப்புகின்றன. அதே வேகத்தில் வதந்திகளும் தவறான தகவல்களும் பரவுகின்றன. ஒரு சம்பவம் குறித்த முழுமையான விவரங்கள் தெரியாத நிலையிலேயே பலர் தங்கள் கருத்துகளைப் பதிவிடுகிறார்கள். சிலர் கடுமையான

வார்த்தைகளால் பிறரைத் தாக்குகிறார்கள். இன்னும் சிலர் உணர்ச்சிவசப்பட்டு வன்முறையைத் தூண்டும் கருத்துகளைப் பகிர்கிறார்கள். குறிப்பாக இளைஞர்கள் இதில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.

ஒரு தவறான செயலுக்குப் பதிலாக மற்றொரு தவறான செயலைச் செய்வது தீர்வாகாது. யாராவது தவறு செய்தால் அவர்களைத் தாக்குவதோ, காயப்படுத்துவதோ நியாயமான வழியல்ல. அவர்களைக் கண்டறிந்து, ஆதாரங்களைச் சேகரித்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான வழியையே பின்பற்ற வேண்டும். சமூக வலைதளங்களில் நமது கருத்துகளைப் பதிவு செய்யும்போது உண்மையான தகவல்களை மட்டுமே பகிர வேண்டும். பிறரை இழிவுபடுத்தும் வார்த்தைகளையும், மதங்களுக்கிடையே பகையை வளர்க்கும் பதிவுகளையும் தவிர்க்க வேண்டும். பிறர் நம்மைத் தாழ்த்திப் பேசினாலும், அவர்களுக்குப் பதிலளிக்கும் விதத்தில் நாம் நம்மைத் தாழ்த்திக்கொள்ளக் கூடாது. நமது பதில் அறிவுடனும் கண்ணியத்துடனும் இருக்க வேண்டும். உணர்வால் செயல்படுவதை விட, அறிவாலும் விவேகத்தாலும் செயல்படுவதே உண்மையான துணிச்சல்.

அரசின் கடமையும் சட்டத்தின் பொறுப்பும்

எந்த மதத்தினரின் வழிபாட்டுத்தலமாக இருந்தாலும் அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் அடிப்படைக் கடமையாகும். பள்ளிவாசல்கள் மட்டுமல்ல; கோயில்கள், தேவாலயங்கள், பிற வழி பாட்டுத் தலங்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

சம்பவங்கள் தொடர்பாகப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மையில் யார் குற்றத்தில் ஈடுபட்டார்கள், அவர்களின் நோக்கம் என்ன, பின்னணியில் வேறு நபர்களின் தொடர்பு உள்ளதா என்பதை ஆதாரங்களின் அடிப்படையில் கண்டறிய வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் விசாரணை முடிவதற்கு முன்பே யாரையும் குற்றவாளியாக அறிவிப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் தடுக்க காவல்துறையின் கண்காணிப்பை வலுப்படுத்துவதும், வழிபாட்டுத்தல நிர்வாகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதும் அவசியம். அரசின் நடவடிக்கைகள் எந்த மதத்திற்கும் ஆதரவாகவோ எதிராகவோ இல்லாமல் அனைவருக்கும் சமமான பாதுகாப்பையும் நீதியையும் வழங்குவதாக இருக்க வேண்டும்.

தமிழ்நாடு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மட்டுமல்ல; பல்வேறு நம்பிக்கைகளையும் அடையாளங்களையும் கொண்ட அனைவருக்கும் சொந்தமான மண். இங்கு வாழும் மக்கள் ஒருவருடைய மகிழ்ச்சியிலும் துயரத்திலும் பங்கெடுத்துக்கொள்ளும் சமூகப் பண்பை நாம் பாதுகாக்க வேண்டும். மதங்களுக்கு இடையே வெறுப்பையும், பகையையும், ஐயங்களையும் விதைக்கும் விஷமக் கருத்துகளுக்கும், செயல்களுக்கும் எதிராகச் சட்டப்பூர்வமாகவும் ஜனநாயக முறையிலும் குரல் கொடுக்க வேண்டும். அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களின் காரணமாகப் பொதுமக்கள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டவோ, சண்டையிட்டுக் கொள்ளவோ கூடாது.

ஒரு சிலரின் தவறான செயல்களுக்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் குற்றம் சாட்டுவது நியாயமல்ல. அதேபோல் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தவறு செய்தவரைப் பாதுகாப்பதும் சரியல்ல. தவறு செய்தவர் யார் என்பதை ஆதாரங்களின் அடிப்படையில் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். பொதுமக்கள் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் வாழ்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும். மத நல்லிணக்கம் என்பது பிரச்னைகள் இல்லாதபோது மட்டும் பேசப்படும் ஒரு கருத்தாக இருக்கக் கூடாது. பிரச்னைகள் ஏற்படும் நேரத்தில்தான் நமது ஒற்றுமையும் மனித நேயமும் வெளிப்பட வேண்டும்.

TRUST WORTHY

அல் அமானத்

ஹஜ் சர்விஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்

30 ஆண்டுகளாக புனித பயணிகளுக்கு
சேவை புரிவதில் பெருமை கொள்கிறோம்

ஹஜ் 2027

அல்லாஹ்வின்
வீட்டிற்கான
உங்கள் பயணம்...
எங்களின்
பொறுப்பு...



டீலக்ஸ் பேக்கேஜ்

பேக்கேஜ் விலை

₹ 6,99,000

ஒரு நபருக்கு

பேக்கேஜ் சிறப்பம்சங்கள்



மக்காவில் Clock Towerஇல் தங்கும் வசதி (0 மீட்டர் தூரம் – ஹரம்)



மினா மற்றும் அரஃபாவில் VIP கூடாரங்கள்



தென்னிந்திய சாப்பாடு (பஃபே)



துவைக்கும் துணி சேவை



உள்ளூர் புனிதல தரிசனம்



அனுபவமிக்க ஆலிம்களின் தினசரி பயான்கள்



ஒரு நாள் தாயிஃப் சுற்றுலா



அனுபவமிக்க குழுவினருடன் பயணம்

தொடர்புக்கு 9551662231 | 9841078636 | 7358496438

B - 3, புஷ்ரா ஹவுஸ், 6/46, நேதாஜி ரோடு, சேத்துப்பட், சென்னை - 31



நாகரிகத்தின் தொடக்கம்

– மௌலவி ஹாஃபிழ் தா.முஹம்மது ஜுபைர் சித்தீகீ B.Com.,

மாணவர், தாருல் உலூம் நத்வதுல் உலமா, லக்னோ, உத்தர பிரதேசம்

மனித நாகரிகத்தின் வளர்ச்சிப் பாதையில் கழிவறைப் பயன்பாடு மிக முக்கியப் பங்காற்றுகிறது. தனிநபர் தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தும் இடம் என்பதற்கு மட்டுமல்ல கழிவறை, மாறாக மனித சுகாதாரத்தை உறுதி செய்யும் தடுப்புச் சுவர் என்றும் நோய்த்தொற்று பரவாமல் தடுக்கும் கேடயம் என்றும் சொன்னால் அது மிகையாகாது. வரலாற்று ஆய்வாளர்களின் கூற்றுப் படி மனித நாகரிகத்தின் முக்கிய மைல் கல்லாகப் பார்க்கப்படும் சிந்து சமவெளி நாகரிகத்தில் வீட்டிற்குள்ளேயே குளியலறை வசதி இருந்ததாகவும், கழிவுநீர் வடிகால் இருந்ததாகவும் அறிய முடிகிறது.

உலக கழிவறை தினம்

திறந்தவெளியில் மலம் கழிப்பதன் ஆபத்து குறித்தும் அதனால் ஏற்படும் மரணங்கள் குறித்தும் விழிப்புஉணர்வு ஏற்படுத்த 2001ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி உலகக் கழிவறை அமைப்பு தொடங்கப்பட்டது. சில ஆண்டுகள் கழித்து உலக அளவில் இந்த நாளை முன்னிறுத்தி விழிப்பு உணர்வு ஏற்படுத்த வேண்டும் என ஐநா சபையில் கோரிக்கை வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 2013ஆம் ஆண்டு முதல் ஐநா சபையால் நவம்பர் 19 உலகக் கழிவறை தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை முன் வைத்து உலக அளவில் விழிப்பு உணர்வை ஏற்படுத்துகிறது.

இதன் பயனாக 2015ஆம் ஆண்டு முதல் 1.2 பில்லியன் மக்கள் பாதுகாப்பான கழிவறை வசதிகளையும், 1.6 பில்லியன் மக்கள் அடிப்படைக் கைகழுவும் சுகாதார வசதிகளையும் பெற்றிருக்கிறார்கள். இது ஒரு புறம் இருந்தாலும் இன்றைய தேதியிலும் 3.4 பில்லியன் மக்கள் பாதுகாப்பான கழிவறை வசதியின்றி வாழ்கின்றனர். அவர்களில் 354 மில்லியன் மக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கின்றனர். மேலும் 1.7 பில்லியன் மக்களுக்கு அடிப்படைக் கைகழுவும் வசதி இல்லை.

அவர்களில் 611 மில்லியன் மக்களுக்கு எந்த வசதியுமே இல்லை என்ற அதிர்ச்சி யூட்டும் தரவுகளை World Health Organization (WHO), UNICEF வெளியிட்டுள்ளன. இதன் விளைவாகப் பல நோய்த்தொற்றுகள் உருவாவதாகவும் சமயங்களில் அதன் முடிவு மரணம் வரை இட்டுச் செல்கிறது என்றும் பாதுகாப்பற்ற குடிநீர், கழிவறை, சுகாதாரக் குறைபாடு காரணமாக உலக அளவில் ஒவ்வொரு நாளும் சராசரியாக ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆயிரத்திற்கு அதிகமானோர் உயிரிழப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு (World Health Organization - WHO)

கடந்த பல தசாப்தங்களாக நடந்து வரும் நகரமயமாக்கலின் பயனாக நகர்ப்புறப் பகுதிகளில் அனைத்து வீடுகளிலும் தனிக் கழிவறைகள் பயன்படுத்தப்படுவதும் மக்கள் அதிகமாகக் கூடும் பூங்கா, பேருந்து, ரயில்,

விமான நிலையங்கள், பள்ளி, கல்லூரிகள், வணக்கத் தலங்களில் பொதுக் கழிவறைகள் சாத்தியப்பட்டிருப்பதும் உண்மையே. ஆனால் கிராமப் பகுதிகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகளுக்கு ஒரு கழிவறை பயன்படுத்தப்படுவதும் திறந்த வெளியில் மலம் கழிப்பதும் இன்னும் தொடரவே செய்கிறது. இதில் பெருநகரங்களில் மிக அடர்த்தியாக எளிய வீட்டு அமைப்புடன் வாழ்பவர்களும் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய ஒன்றிய அரசு இதைக் கவனத்தில் கொண்டு 2014ஆம் ஆண்டு ஸ்வச் பாரத் மிஷன் மூலம் கழிவறை கட்ட ஊக்கத் தொகை வழங்கும் ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. இதன் மூலம் ஒன்றிய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து பயனர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி வீட்டுக்கு ஒரு கழிவறை என்பதை உறுதி செய்ய முனைந்தது. இணையத் தரவுகளின்படி இதன் மூலம் பல இலட்சம் பேர் பயன்பெற்றதாகவும், இதன் முக்கியத்துவம் கருதி இரண்டாம் முறையாக 2021ஆம் ஆண்டு மீண்டும் திட்டத்தைத் தொடங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இஸ்லாமும் சுகாதாரமும்

நபி(ஸல்) அவர்கள் இஸ்லாமிய வணக்க வழிபாடுகளைப் போதிக்க மட்டும் அனுப்பப்படவில்லை. மாறாக நற்குணத்தையும் தனிமனித ஒழுக்கத்தையும் சீர்திருத்தவே அனுப்பப்பட்டார்கள். வணக்க வழிபாடுகள் எல்லாம் அவர்கள் தூதராக அனுப்பப்பட்டு 13 ஆண்டுகளுக்குப் பின்பே அருளப்பட்டன. அதுவரை அந்த மக்களுக்கு நபி(ஸல்) அவர்கள் நல்ல குணங்களையும் தனிமனித ஒழுக்கத்தையும் கற்பித்து, அறியாமையில் மூழ்கிக் கிடந்தவர்களைப் பின்பற்றத்தக்க சமூகமாக உருவாக்கிக் காட்டினார்கள்.

பாரசீக நாட்டில் நெருப்பை வணங்கும் வசதியான குடும்பத்தைத் துறந்து சத்தியத்தைத் தேடிப் பல பாதிரியார்களிடம் பணிபுரிந்து அவர்களின் உபதேசங்களுக்குச் செவிசாய்த்து அதன்படி இறுதித் தூதர் வரவுள்ளார் என்பதை உறுதிசெய்து முந்தைய வேதங்களில் அந்தத் தூதரைப் பற்றிய தகவல்களைக் கேட்டறிந்து அங்கிருந்து ஒரு வியாபாரக் குழுவுடன் மதீனா நோக்கிப் பயணப்பட்டார் ஸல்மான் அல் ஃபாரிஸி(ரலி). அந்த வியாபாரக் கூட்டத்தால் ஏமாற்றப்பட்டுச் சந்தையில் அடிமையாக விற்கப்பட்டார்.

அதைப் பொருட்படுத்தாமல் அங்கேயே தங்கியிருந்தபோது தன்னை இறைவனால் அருளப்பட்ட இறைத்தூதர் என்று கூறிக்கொள்வதாகவும், முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் தற்போது மதீனா நோக்கி வந்துள்ளார்கள் என்பதையும் அறிந்து அவர்களைச் சந்தித்தார். பாதிரியார்கள் கூறிய வேதங்களில் குறிப்பிடப்பட்ட அடையாளங்கள் அவர்களிடம் காணப்படவே, நபி(ஸல்) அவர்களின் கை பிடித்து இஸ்லாத்தை ஏற்றார்.

இஸ்லாத்தை ஏற்க மறுத்த சிலர், அவரையும் அவரது மார்க்கத்தையும் ஏளனம் செய்யும் நோக்கில் அவரிடம் வந்து, 'மலம், ஜலம் கழிப்பதைக்கூடவா உங்கள் தூதர் கற்றுக் கொடுக்கிறார்?' என்று கேட்டனர். அதற்கு சத்திய மார்க்கத்தைப் பெருமைப்படுத்தும் நோக்கில், 'ஆம்! எங்கள் தூதர் மலம், ஜலம் கழிக்கும் போது இன்னின்ன விஷயங்களைப் பேண வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்கள்' என்று கூறி, அவற்றைப் பட்டியலிட்டுக் காட்டினார்.

சுத்தமான சூழலையும் சுகாதாரத்தையும் நிலைநிறுத்தும் பொருட்டு சுத்தம், ஈமானின் (இறைநம்பிக்கையின்) ஒரு பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. சுத்தம் இன்றி எந்த வணக்க வழிபாடுகளையும் செய்ய முடியாது.

ஒருமுறை நபித்தோழர்களால் சூழப்பட்ட ஒரு சபையில் நபி(ஸல்) அவர்கள், 'நான் உங்களுக்குத் தந்தையின் இடத்தில் இருக்கிறேன்' என்று கூறி, மலம், ஜலம் கழிக்கும் பொழுது பேண வேண்டிய ஒழுக்கத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

அசுத்தம் குறித்து குறிப்பாய் சிறுநீர் விஷயத்தில் கவனக்குறைவாக இருப்பவர்களுக்கு மண்ணறையில் வேதனை உண்டு என்ற எச்சரிக்கையும் நபிமொழியில் காணக் கிடைக்கிறது.

கழிவறையில் பேண வேண்டிய ஒழுக்கங்கள்:

● இஸ்லாத்தின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக மக்கா மாநகரில் அமைந்துள்ள கஅபத்துல்லா அறியப்படுகிறது. இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான தொழுகையை நிறைவேற்ற அந்தத் திசையை முன்னோக்க வேண்டி இருக்கிறது. எனவே கழிவறையில் அந்தத் திசையை முன்னோக்கவோ பின்னோக்கவோ வேண்டாம் என நபி(ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.

● சுத்தம் செய்ய வலக்கையைப் பயன்படுத்த வேண்டாம் என்று போதித்தார்கள்.

● சுத்தம் செய்யும்பொழுது மூன்று முறை சுத்தம் செய்வதை அறிவுறுத்தியதோடு அதைவிடக் குறைக்கக் கூடாது என்றும் கட்டளையிட்டார்கள்.

● பொதுமக்கள் பயன்படுத்தும் பாதைகளிலும் நிழல் தரும் இடங்களிலும் அசுத்தம் செய்வதைக் கண்டித்தார்கள்.

● நீர்த்தேக்கங்களில் அசுத்தம் செய்வதைத் தடுத்தார்கள்.

● பலன் தரும், பழம் தரும் மரங்களுக்குக் கீழ் அசுத்தம் செய்வதைத் தடுத்தார்கள்.

● சுயதேவைக்காகச் செல்லும்பொழுது மறைவை உறுதி செய்ய அறிவுறுத்தினார்கள். அத்துடன் சுயதேவையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்பொழுது பேசுவதையும் தடுத்துள்ளார்கள்.

● மிகச் சிறிய அளவு சிறுநீர்த் துளிகூட உடலிலோ உடையிலோ பட்டுவிடாமல் இருக்க நின்று கொண்டு சிறுநீர் கழிப்பதைத் தடுத்தார்கள்.

● குபா நகரத்தைச் சேர்ந்தவர்கள் சுயதேவையை நிறைவேற்றிய பின் கற்களால் சுத்தம் செய்து பின்னர் தண்ணீராலும் சுத்தம் செய்பவர்களாக இருந்தார்கள். இறைவன் அவர்களைப் பற்றிப் புகழ்ந்து கூறியதை எடுத்துரைத்து, 'நீங்கள் எதைச் செய்தீர்கள்?' என்று அவர்களிடம் விசாரித்து, கற்கள் (தற்காலத்தில் டிஷ்யூ) மூலம் சுத்தம் செய்த பின் தண்ணீரைப் பயன்படுத்தியும் சுத்தம் செய்யும் பழக்கத்தை ஆர்வமூட்டினார்கள்.

● உடலைச் சுத்தம் செய்வதற்காகக் குளியலறைக்குச் செல்லும்பொழுது அசுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் அங்கே சிறுநீர் கழிப்பதைத் தடுத்தார்கள்.

இறுதியாக..

● உலக அளவில் இந்த அமைப்புகள் சேவை மனப்பான்மையுடன் விழிப்புஉணர்வை ஏற்படுத்தி வந்தாலும் இதைக் கடமையாக உணர்ந்து, ஒவ்வொருவரும் இது பற்றிய விழிப்பு உணர்வைத் தன்னுடைய வீட்டாரிடமிருந்து தொடங்குவது காலத்தின் கட்டாயமாகும்.

● கிராமப்புறம், நகர்ப்புறம் என்ற வேறுபாடின்றி ஒவ்வொரு வீட்டிலும் முறையான, சுகாதாரமான கழிவறை இருப்பதை உறுதி செய்ய வேண்டும். திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

● பொதுக் கழிவறைகளைப் பயன்படுத்தும்போது அடுத்தவர் முகம் சுழிக்காத வண்ணம் நீர் ஊற்றித் தூய்மையாகப் பராமரிப்பது நமது தார்மிகக் கடமையாகும். அவற்றைச் சுத்தம் செய்வது தூய்மைப் பணியாளர்களுக்கு வேலை என்றால் நமக்கு அது கடமை என்பதை உணர வேண்டும்.

● நீர்நிலைகள், நிழல் தரும் மரங்கள், பாதையோரங்கள் போன்ற பொது இடங்களில் அசுத்தம் செய்வதைத் தவிர்த்து, சுற்றுச் சூழலையும் பொது சுகாதாரத்தையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குச் சுகாதாரமான உலகை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்.

● கழிவறை ஒழுக்கங்கள், சுய தேவைக்குப் பின் சோப்புப் போட்டுக் கைகளைக் கழுவும் பழக்கம், தூய்மையின் ஆன்மிக, அறிவியல் நன்மைகளை இளைய தலைமுறையினருக்குச் சிறுவயதிலிருந்தே பயிற்றுவிக்க வேண்டும்.

● தூய்மைப் பணியாளர்கள் சுகாதாரத்தை உறுதி செய்யும் மெய்க்காவலர்கள். எனவே அவர்களைக் கண்ணியமாகவும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்.

• ஐ.ஜலாலுத்தீன்

நூல் கொள்முதல் சர்ச்சை: ஊழல் ஒழிப்பும் அறிவுப் பாதுகாப்பும்

உளவழல் நடந்திருந்தால் விசாரிக்கப்பட வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் சிலரின் தவறுகளுக்காக ஒட்டுமொத்தப் பதிப்புலகத்தையும் தண்டிப்பதும், நூலகங்களுக்கான புத்தகக் கொள்முதலை முடக்குவதும் அறிவுச் சமூகத்திற்குச் செய்யப்படும் அநீதியாகும்.

தமிழ்நாட்டின் அறிவுப் பாரம்பரியமும் பதிப்புலகத்தின் பங்களிப்பும்


தமிழ்நாடு வெறும் நிலப்பரப்பல்ல. அது நீண்ட நெடிய சிந்தனை மரபையும், சமூகச் சீர்திருத்த வரலாற்றையும், பகுத்தறிவுப் பாரம்பரியத்தையும், மொழி உணர்வையும், சமூகநீதிக் கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அறிவுச் சமூகமாகும். இந்தச் சமூகத்தின் சிந்தனை வளர்ச்சிக்குப் பின்னால் பல்வேறு இயக்கங்களும், கல்வியாளர்களும், எழுத்தாளர்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சிந்தனைகளைத் தலைமுறைகளைக் கடந்து மக்களிடம் கொண்டு சேர்த்ததில் புத்தகங்களுக்கும், பதிப்பகங்களுக்கும், நூலகங்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பங்கு இருக்கிறது.

ஒரு சமூகத்தின் அரசியல் அதிகாரம் மாறலாம். ஆட்சி மாறலாம். தலைமுறைகளின் வாழ்க்கை முறைகளும் மாறலாம். ஆனால் அந்தச் சமூகத்தின் சிந்தனைத் தொடர்ச்சியைப் பாதுகாக்கும் வலிமை புத்தகங்களிடமே இருக்கிறது. பெரியார், அண்ணா, அம்பேத்கர் போன்றோரின் சிந்தனைகள் தொடர்ந்து விவாதிக்கப்படுவதற்கும், சமூக நீதி, சமத்துவம், மத நல்லிணக்கம், பகுத்தறிவு போன்ற கருத்துகள் மக்களிடம் உயிர்ப்புடன் இருப்பதற்கும் நூல் களும் அவற்றைப் பரப்பிய பதிப்பகங்களும் முக்கியக் காரணிகளாக இருந்துள்ளன.

இத்தகைய சூழலில் இப்போது எழுந்துள்ள நூலக நூல் கொள்முதல் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளை வெறும் நிர்வாகப் பிரச்னையாக மட்டும் பார்க்க முடியாது. அவை பதிப்புலகத்தின் எதிர்காலத்தையும், நூலக இயக்கத்தின் தொடர்ச்சியையும், தமிழ் நாட்டின் அறிவுசார் வளர்ச்சியையும் பாதிக்கக்கூடிய கேள்விகளை எழுப்புகின்றன.

நூல் கொள்முதல் சர்ச்சை: உண்மைகளும் கேள்விகளும்

கோவை பெரியார் அறிவுலகத்தில் கொள்முதல் செய்யப்பட்ட சில நூல்களின் தரம், உள்ளடக்கம், விலை, ஆசிரியர்களின் நம்பகத் தன்மை குறித்து எழுத்தாளர் பெருமாள்



முருகன் எழுப்பிய கேள்விகள் இந்த விவ காரத்தைப் பொதுவெளிக்குக் கொண்டு வந்து உள்ளது.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் நூல்கள், உண்மைத்தன்மை உறுதி செய்யப் படாத ஆசிரியர் பெயர்கள், அடிப்படைத் தகவல் பிழைகள், அதிகப்படியான விலை நிர்ணயம் போன்ற குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. இவை சாதாரணமான குற்றச்சாட்டுகள் அல்ல. பொதுமக்களின் வரிப்பணமும், வாசகர்களின் அறிவுரிமையும் சம்பந்தப்பட்டவை.

2026 நவம்பர் 9ஆம் தேதி பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன், நூல கங்களுக்கான கொள்முதல் ஆணைகளை ரத்து செய்யப் போவதாகவும், பதிப்பாளர்கள் சங்கம், அறிஞர்களுடன் ஆலோசித்து புதிய வெளிப்படையான கொள்முதல் கொள்கை உருவாக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து நூல் கொள்முதலுக்காக வழங்கப்பட்ட அரசாணை ரத்து செய்யப்பட் டுள்ளது.

2024ஆம் ஆண்டிலேயே நூல் கொள் முதலில் வெளிப்படைத்தன்மையை உறுதிப் படுத்த உயர்நீதிமன்றம் வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தது. அவை பின்பற்றப்படாதது குறித்து கேள்வி எழுப்பிய சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தற்போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நூலகக் கொள்முதலில் ஊழல் நடந்திருந் தால் அதை மறைப்பது அறிவைப் பாதுகாப் பதாகாது. அதேபோன்று ஊழலை ஒழிப்பதன் பெயரில் நூல் கொள்முதலையே முடக்கு வதும் அறிவைப் பாதுகாப்பதாகாது.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் உள்ள அரசியல்

தமிழ்நாட்டின் சிந்தனை மரபு பல்வேறு கருத்தியல் போராட்டங்களைக் கடந்து



நூலகக் கொள்முதல் குற்றச்சாட்டுகளை அரசியல் ஆதாயத்திற்கான கருவியாக மாற்றுவதும் தவறு. அதேபோன்று தமிழ்நாட்டின் அறிவுச் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள உண்மையான அச்சுறுத்தல்களை மறைப்பதற்காக இந்தச் சர்ச்சையைப் பயன்படுத்துவதும் தவறு. இந்த இரண்டு அபாயங்களையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டும்.

வளர்ந்திருக்கிறது. சமூகநீதி, சாதி ஒழிப்பு, மதநல்லிணக்கம், மொழியுரிமை, அறிவியல் மனப்பான்மை ஆகியவற்றைப் பரப்புவதில் பதிப்புலகம் முக்கியப் பங்காற்றியுள்ளது. இந்தப் பின்னணியில் நூலகக் கொள்முதல் சர்ச்சை ஒரு முக்கியமான அச்சத்தை உரு வாக்குகிறது. இந்த விவகாரம் உண்மையான ஊழலை ஒழிப்பதற்கான நடவடிக்கையாக மட்டுமே அமையுமா? அல்லது தமிழ்நாட்டின் சிந்தனைப் பாரம்பரியத்தையும் பதிப்புல கத்தின் நம்பகத்தன்மையையும் பலவீனப் படுத்தும் அரசியல் விவாதமாக மாறுமா?

வலதுசாரி அல்லது வகுப்புவாதச் சிந்த னைகளை முன்னிறுத்தும் சக்திகள் உட்பட எந்தக் கருத்தியல் அமைப்பும், இத்தகைய சர்ச்சைகளைத் தங்களுடைய அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தற்போதைய சர்ச்சைக்குப் பின்னால் குறிப்பிட்ட சக்திகள்

திட்டமிட்டுச் செயல்படுகின்றன என்று உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரங்கள் இதுவரை முன்வைக்கப்படவில்லை. எனவே அத்தகைய ஐயங்களை விசாரணையால் நிரூபிக்கப்பட்ட உண்மைகளாகச் சித்திரிக்கக் கூடாது.

அதேநேரத்தில் ஊழல் குற்றச்சாட்டுகளின் பெயரால் ஒட்டுமொத்தப் பதிப்புலகத்தையும் ஐயத்திற்குரியதாக மாற்றும் பொதுக்கருத்து உருவாகாமல் பார்த்துக்கொள்வது அவசியம். ஏனெனில் ஒரு சமூகத்தின் சிந்தனை வலிமையைப் பலவீனப்படுத்துவதற்கு அதன் நூலகங்களை மூட வேண்டிய அவசியமில்லை. நூல்களின் மீதும், எழுத்தாளர்களின் மீதும், பதிப்பாளர்களின் மீதும் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையைச் சிதைத்தாலே போதுமானது. அத்தகைய நிலை உருவாகாமல் தடுப்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல; அறிவுஜீவிகள், எழுத்தாளர்கள், வாசகர்கள், சமூக இயக்கங்களின் கூட்டுப் பொறுப்பு மாகும்.

ஒரு சமூகத்தின் சிந்தனை வலிமையைப் பலவீனப்படுத்துவதற்கு அதன் நூலகங்களை மூட வேண்டிய அவசியமில்லை. நூல்களின் மீதும், எழுத்தாளர்களின் மீதும், பதிப்பாளர்களின் மீதும் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையைச் சிதைத்தாலே போதுமானது.



பதிப்பாளர்கள் வெறும் வணிகர்கள் அல்ல; அறிவின் பாதுகாவலர்கள்!

தமிழகப் பதிப்புலகத்தின் பங்களிப்பை வெறும் விற்பனைத் தொகையாலும் இலாபத்தாலும் அளவிட முடியாது. பல சிறு, நடுத்தரப் பதிப்பகங்கள் வரலாறு, சமூகவியல், அறிவியல், இலக்கியம், தத்துவம், மதநல் லிணக்கம், சிறுபான்மையினர் ஆய்வு, பெண்கள் முன்னேற்றம் போன்ற துறைகளில் நூல்களை வெளியிட்டு வருகின்றன. இவற்றில் பல நூல்கள் மிகப்பெரிய வணிகச் சந்தையைக் கொண்டவை அல்ல. சில நூல்களின் வாசகர் வட்டம் குறுகியதாகவே இருக்கலாம். இருப்பினும் அவற்றின் சமூகப் பயன் அளப்பரியது.

அத்தகைய நூல்களை வெளியிடுவதற்கான முதலீட்டையும், ஆசிரியர் உழைப்பையும், மொழிபெயர்ப்புச் செலவையும், அச்சிடுதல், விநியோகச் சவால்களையும் பதிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அரசு நூலகங்களின் கொள்முதல் இத்தகைய நூல்களுக்கு ஒரு முக்கியமான வாசகர் தளத்தையும் பொருளாதார ஆதரவையும் வழங்கக் கூடும்.

நூலகக் கொள்முதல் என்பது பதிப்பாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை மட்டுமல்ல. அது பொதுமக்களின் அறிவுரிமையை நிறைவேற்றுவதற்கான அரசின் முதலீடாகும். ஒரு புத்தகத்தை அரசு வாங்கும் போது ஒரு பதிப்பாளருக்கு வருமானம் கிடைக்கிறது. ஆனால் அந்தப் புத்தகத்தை நூலகத்தில் நூறு பேர் வாசிக்கும்போது சமூகத்திற்கே அறிவுச் செல்வம் கிடைக்கிறது. இதுவே நூலகக் கொள்முதலின் உண்மையான சமூகப் பொருளாதாரம்.

ஒட்டுமொத்தப் பதிப்புலகமும் தண்டிக்கப்படலாமா?

நூலகக் கொள்முதல் ஆணைகள் ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு, நேர்மையாக இயங்கும் பதிப்பாளர்களிடையே நியாயமான கவலையை

ஏற்படுத்தக்கூடியது. ஏற்கெனவே நூல்களைத் தயாரித்தவர்கள், அச்சிட்டவர்கள், கொள் முதல் ஆணைகளை நம்பி முதலீடு செய்த வர்கள் ஆகியோரின் நிலை என்ன?

ஒரு சில பதிப்பகங்கள் முறைகேடுகளில் ஈடுபட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால் அவற் றின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அதற்காகத் தவறே செய் யாத பதிப்பகங்களின் கொள்முதல் வாய்ப்பு களையும் முடக்குவது நியாயமல்ல. இதனால் பதிப்பாளர்கள் மட்டுமல்லாமல், எழுத் தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், அச்சகத் தொழிலாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் எனப் பதிப்பு துறையைச் சார்ந்த பலரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படலாம். அதிலும் குறிப்பாக சமூகச் சிந்தனை நூல்களை வெளி யிடும் சிறிய பதிப்பகங்களின் பொருளாதார நிலைத்தன்மை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

எனவே அரசு ஐயத்திற்குரிய கொள் முதல்களை ஆய்வுக்கு உட்படுத்துவதோடு, முறையான ஆவணங்களும் தரமான நூல் களும் கொண்ட பதிப்பாளர்களின் கொள் முதல் நடவடிக்கைகளை விரைவாக மீண்டும் தொடங்க வேண்டும்.

அறிவுச் சமூகத்தைப் பாதுகாக்க ஏழு சீர்திருத்தங்கள்

நூலகக் கொள்முதலில் வெளிப்படைத்தன் மையையும் தரத்தையும் உறுதிப்படுத்த அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. நேர்மையான விசாரணை

கொள்முதல் முறைகேடுகள் குறித்து சட்டப் பூர்வமான, வெளிப்படையான விசாரணை நடத்தி குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களிடம் இருந்து பொதுப்பணத்தை மீட்க வேண்டும்.

2. வெளிப்படையான கொள்முதல் இணையதளம்

தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள், ஆசிரி யர்கள், பதிப்பாளர்கள், விலைகள், பிரதி



நூலகக் கொள்முதல் ஆணைகள் ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு, நேர்மையாக இயங்கும் பதிப்பாளர்களிடையே நியாயமான கவலையை ஏற்படுத்தக்கூடியது. ஏற்கெனவே நூல்களைத் தயாரித்தவர்கள், அச்சிட்டவர்கள், கொள்முதல் ஆணைகளை நம்பி முதலீடு செய்தவர்கள் ஆகியோரின் நிலை என்ன?

களின் எண்ணிக்கை, தேர்வுக்கான கார ணங்கள் ஆகியவற்றைப் பொதுமக்கள் பார் வைக்கு வெளியிட வேண்டும்.

3. சுயாதீன நூல் தேர்வுக் குழு

இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், நூல கர்கள், துறைசார் வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்ட குழு அமைக்க வேண்டும். உறுப் பினர்களின் நலன் முரண்பாடுகள் வெளிப் படையாக அறிவிக்கப்பட வேண்டும்.

4. நூல்களின் தரச் சரிபார்ப்பு

நூலாசிரியரின் நம்பகத்தன்மை, உள்ள டக்கத் தரம், பதிப்புரிமை, விலை நியாயம், தகவல் துல்லியம் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டும். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தியிருப்பது மட்டுமே தடை விதிப் பதற்கான காரணமாக இருக்கக்கூடாது; போலியான தகவல்களும் தவறான ஆசிரியர் அடையாளங்களுமே முக்கியப் பிரச்னைகள்.

5. சிறு பதிப்பகங்களுக்குச் சமவாய்ப்பு

பெரிய பதிப்பகங்களுக்கு மட்டுமல்லாமல், தரமான நூல்களை வெளியிடும் சிறிய, பிராந்திய சுயாதீனப் பதிப்பகங்களுக்கும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

6. கால வரையறையுடன் கொள்முதல் மீட்பு

ஐயத்திற்குரிய ஆணைகளைத் தனியாக ஆய்வு செய்து, தகுதியான நூல்களுக்கான கொள்முதலைத் தேவையற்ற தாமதமின்றி மீண்டும் தொடங்க வேண்டும்.

7. வாசகர் மைய நூலக வளர்ச்சி

மாணவர்கள், ஆய்வாளர்கள், பெண்கள், இளைஞர்கள், கிராமப்புற வாசகர்கள் ஆகியோரின் தேவைகளுக்கேற்ப நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நூலகங்களின் வெற்றியை வாங்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையால் மட்டுமல்லாமல் அவற்றின் பயன்பாட்டாலும் மதிப்பிட வேண்டும். இத்தகைய சீர்திருத்தங்கள் ஊழலைக் கட்டுப்படுத்துவதோடு பதிப்புலகத்தின் மீதான நம்பிக்கையையும் வலுப்படுத்தும்.

கொள்முதலைச் சீரமைப்போம்; நிறுத்திவிட வேண்டாம்

தமிழ்நாடு அரசு இந்த விவகாரத்தை ஓர் அரசியல் குற்றச்சாட்டு அல்லது நிர்வாக நடவடிக்கை என்ற அளவோடு நிறுத்திவிடக் கூடாது. இது தமிழ்நாட்டின் வாசிப்புப் பண்பாட்டையும் அறிவுசார் எதிர்காலத்தையும் மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக மாற்ற வேண்டும்.

நூலகங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர வேண்டும். சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். புதிய எழுத்தாளர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். தரமான பதிப்பாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக நூலகக் கொள்முதல் நீண்டகாலம் முடங்கினால் அதன் பாதிப்பு பதிப்பாளர்களைவிட வாசகர்களுக்கே அதிகமாக இருக்கும்.

ஒரு மாணவருக்குக் கிடைக்க வேண்டிய அறிவியல் நூல் கிடைக்காமல் போகலாம். ஒரு கிராமப்புற வாசகருக்குக் கிடைக்க வேண்டிய வரலாற்று நூல் கிடைக்காமல் போகலாம். ஒரு புதிய எழுத்தாளரின் சிந்தனை சமூகத்தைச் சென்றடையாமல் போகலாம். இவையெல்லாம் வெறும் நிர்வாகத் தாமதம் என்று கருதிவிட முடியாது.

அரசியலாக்க வேண்டாம்

தமிழ்நாட்டின் அறிவுப் பாரம்பரியம் ஒரே நாளில் உருவானதல்ல. பல தலைமுறைகளின் உழைப்பாலும், எழுத்தாளர்களின் சிந்தனைகளாலும், பதிப்பாளர்களின் அர்ப்பணிப்பாலும், வாசகர்களின் தேடலாலும் கட்டமைக்கப்பட்டது. அந்தப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பது என்பது ஊழலை மறைப்பதல்ல. மாறாக ஊழலற்ற, தரமான, அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கும் நூலகக் கட்டமைப்பை உருவாக்குவதாகும்.

நூலகக் கொள்முதல் குற்றச்சாட்டுகளை அரசியல் ஆதாயத்திற்கான கருவியாக மாற்றுவதும் தவறு. அதேபோன்று தமிழ்நாட்டின் அறிவுச் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள உண்மையான அச்சுறுத்தல்களை மறைப்பதற்காக இந்தச் சர்ச்சையைப் பயன்படுத்துவதும் தவறு. இந்த இரண்டு அபாயங்களையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் அறிவுப் பாரம்பரியம் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது குறிப்பிட்ட கருத்தியல் குழுவுக்கும் மட்டும் சொந்தமானதல்ல. அது ஒட்டுமொத்த மக்களுக்கும் சொந்தமான பொதுச் செல்வம். எனவே தவறு செய்தவர்களைத் தண்டிப்போம்; நேர்மையான பதிப்பாளர்களைப் பாதுகாப்போம்; நூலகக் கொள்முதலைச் சீரமைப்போம்; வாசிப்புப் பண்பாட்டை வளர்ப்போம்.

ஒரு சமூகத்தின் அறிவை அழிக்க அதன் புத்தகங்களை எரிக்க வேண்டியதில்லை; புத்தகங்கள் மக்களைச் சென்றடையும் பாதைகளை அடைத்தாலே போதும்.

நீங்கள் ஒரு வியாபாரியா? அல்லது சீர்திருத்தவாதியா?

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

வியாபாரி, சீர்திருத்தவாதி ஆகிய இரு வருக்கும் இடையில் ஓர் ஒற்றுமை இருக் கிறது. இருவரும் தம்மிடம் உள்ளதைச் சந்தைப்படுத்துபவர்கள். வியாபாரி தன்னி டம் உள்ள பண்டங்களைச் சந்தைப்படுத்து வார். சீர்திருத்தவாதியோ தனது சீர்திருத்தக் கருத்துகளையும் கொள்கைகளையும் சந்தைப் படுத்துவார். ஆனால் இருவரிடமும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு.


வியாபாரியின் முதன்மையான நோக்கம் வாடிக்கையாளரின் விருப்பத்தை அறிந்து, அவரது விருப்பத்திற்குரிய பண்டங்களை அவருக்குக் கிடைக்கச் செய்வதாக இருக் கும். சந்தையில் எதற்குத் தேவை இருக் கிறதோ, மக்கள் எதை வாங்க விரும்பு கிறார்களோ, அதற்கேற்ப தனது பொருளைத் தேர்ந்தெடுத்து வழங்குவார் வியாபாரி. மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதே வியாபாரியின் தேடலாக இருக்கும்; கேள்வி யாக இருக்கும். அதற்கான பதிலைத் தேடி, அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதே அவரது இலக்கு.

ஆனால் ஒரு சீர்திருத்தவாதியின் பணி இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அவர் மக்களின் தற்போதைய விருப்பங்களைக் கவனத்தில் கொள்வார். ஆனால் அவற் றுக்கு அடிமையாகி விடமாட்டார். மக்களின் விருப்பத்தை விட அவர்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதே அவரது கேள்வி யாக இருக்கும். சில நேரங்களில் மக்கள் விரும்புவது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்காது. அதேபோன்று அவர்களுக்குப் பயனுள்ளதாக இருப்பது அவர்களுக்கு உடனடியாகப் பிடிக்காமல் இருக்கலாம்.

உதாரணமாக மருந்து கசப்பாக இருக்க லாம்; ஆனால் அது நோயைக் குணப்படுத் தும். நோயாளி அதனை விரும்பாத போதும் அதனை அவருக்குக் கொடுக்க வேண்டி யிருக்கும். இனிப்பான ஓர் உணவு நாவிற்குச் சுவையாக இருக்கலாம்; ஆனால் அது சில போது உடலுக்குத் தீங்கு விளைவிக்கலாம். இந்நிலையில் அதனை அருந்த விடாமல் தடுக்க வேண்டும் அல்லவா?

எனவே சீர்திருத்தவாதி மக்களின் விருப் பத்தை விட அவர்களின் நலனை முன்னிறுத் துவார். இதனால் அவர் பலபோது மக்க ளால் விரும்பப்படமாட்டார். உண்மையான சீர்திருத்தம் எப்போதும் இனிமையாக இருப் பதில்லை.

ஒருவரிடம் தவறான ஒரு பழக்கம் இருந் தால் அதைச் சுட்டிக்காட்டுவது அவருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஒரு சமூகத்தில் நீண்டகாலமாக இருந்து வரும் ஒரு தவறான நடைமுறையை மாற்ற முயற்சித்தால் அத னால் சிலருக்கு அசௌகரியம் ஏற்படலாம்;



அதிருப்தியும் உருவாகலாம். அப்போது சீர் திருத்தவாதி இரண்டு பாதைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்.



ஒன்று மக்கள் விரும்புவதைச் சொல்லி அவர்களின் ஆதரவைப் பெறுவது அல்லது மக்களுக்குத் தேவையான உண்மையைச் சொல்லி அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது. இரண்டாவது பாதைதான் சீர்திருத்தத்தின் கடினமான பாதை. எனவே சீர்திருத்தவாதிக்கும் வியாபாரிக்கும் இடையே ஒரு நுட்பமான வேறுபாடு உள்ளது.

வியாபாரி ‘இதனைத்தான் மக்கள் விரும்புகிறார்கள்; எனவே இதை அவர்களுக்கு வழங்குகிறேன்’ என்ற நிலைப்பாட்டில் இருப்பார். ஆனால் சீர்திருத்தவாதியோ, ‘மக்களுக்கு இதுதான் தேவை; எனவே இதை அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும்’ என்று சிந்தித்துச் செயல்படுபவராக இருப்பார்.

ஆயினும் இதற்காக சீர்திருத்தவாதி மக்களின் விருப்பு, வெறுப்புகளைக் கவனிக்க வேண்டியதில்லை என்பது பொருளல்ல. மக்களுக்கு விருப்பமானவற்றை விட அவசியமானவற்றை அவர் வழங்குவார்; ஆனால் அதை எப்படிக் கொடுத்தால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் அறிந்திருப்பார்.

இதனால் சீர்திருத்தவாதிக்கு இரண்டு திறன்கள் அவசியம். ஒன்று அவசியமானதைத் தேர்ந்தெடுக்கும் அறிவு. இரண்டாவது உண்மையை மக்களிடம் வெற்றிகரமாகக் கொண்டு போய்ச் சேர்க்கும் ஞானமும் திறமையும். இந்த வகையில் அழைப்பு, சமூகச் சீர்திருத்தப் பணியில் ஈடுபடும் ஓர் அழைப்பாளர் மக்கள் கேட்க விரும்புவதையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதையும் மட்டுமே எப்போதும் பேசுபவராக இருக்கக் கூடாது. மறுபக்கம், ‘நான் உண்மையை மட்டுமே பேசுவேன்; மக்கள் எப்படி எடுத்துக்கொண்டாலும் எனக்குக் கவலையில்லை’ என்பதும் அவரது நிலைப்பாடாக இருக்கக் கூடாது. மிகவும் புத்தி சாதுர்யமாக தனது சீர்திருத்தப் பணியை முன்னெடுக்க வேண்டும்.

ஒரு சீர்திருத்தவாதிக்கான குறித்த வழிகாட்டலை திருக்குர்ஆன் சொற்சுருக்கத்துடனும் பொருட்செறிவுடனும் பின்வருமாறு வழங்குகின்றது:

‘(நபியே!) விவேகத்துடனும், அழகிய அறிவுரைகள் மூலமாகவும் உம் இறைவனின் மார்க்கத்தின் பக்கம் அழைப்பீராக! மேலும் மிகச் சிறந்த முறையில் மக்களிடம் விவாதம் புரிவீராக! தன்னுடைய பாதையிலிருந்து வழிபிறழ்ந்தவர் யார் என்பதையும், நேர்வழியில் இருப்பவர்கள் யார் என்பதையும் உம் அதிபதி நன்கறிவான்’ (திருக்குர்ஆன் 16:125)

வியாபாரி ‘இதனைத் தான் மக்கள் விரும்புகிறார்கள்; எனவே இதை அவர்களுக்கு வழங்குகிறேன்’ என்ற நிலைப்பாட்டில் இருப்பார். ஆனால் சீர்திருத்தவாதியோ, ‘மக்களுக்கு இதுதான் தேவை; எனவே இதை அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும்’ என்று சிந்தித்துச் செயல்படுபவராக இருப்பார்.

மீண்டும் உயிரோடு எழுப்புவது இவ்வாறுதான்!

மேலும் காற்றுகளை அனுப்புகின்றவன் அல்லாஹ்தான்! பின்னர் அவை மேகங்களை உயரே கிளப்புகின்றன. பிறகு அதனை வறண்ட பகுதிக்கு நாம் கொண்டு செல்கின்றோம். மேலும் இறந்து கிடக்கும் பூமியை அதன் மூலம் உயிர்ப்பிக்கின்றோம். (இறந்து போன மனிதர்களை) மீண்டும் உயிரோடு எழுப்புவதும் இவ்வாறுதான்![19]

எவரேனும் கண்ணியத்தை விரும்பினால் கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே உரியதாகும் (என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்).[20] அவனை நோக்கி உயர்ந்து செல்வது தூய்மையான சொல் மட்டுமே! இன்னும் நற்செயல் அதனை மேலே உயர்த்துகின்றது.[21] மேலும் எவர்கள் தீயசூழ்ச்சிகள் செய்கின்றார்களோ[22] அவர்களுக்குக் கடுமையான வேதனை இருக்கின்றது. மேலும் அவர்களுடைய சூழ்ச்சிகள் தாமாகவே அழியக்கூடியவையாக இருக்கின்றன.

● அத்தியாயம் 35 ஃபாத்திர் ● திருவசனங்கள் : 9, 10

19. இந்த அறிவீனர்கள் மறுமையை நடைமுறை சாத்தியம் இல்லாததாய் நினைக்கின்றார்கள். இதனால்தான் இவர்கள் இந்த உலகத்தில் தாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; தம்முடைய செயல்கள் அனைத்துக்கும் ஒரு நாள் இறைவனுக்கு முன்னால் பதில் தந்தாக வேண்டிய நேரம் ஒருபோதும் வராது என்கிற தம்முடைய நினைப்பில் திளைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் மூழ்கிக் கிடக்கின்ற இந்தக் கருத்து வெற்று ஊகமும் தவறான கற்பனையும்தானே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இறந்து கிடக்கின்ற நிலம் மழை பெய்ததும் திடீரென்று சிலிர்த்தெழுந்து பூத்துக் குலுங்குவதைப் போன்று மண்ணுக்குள் செத்துக் கிடந்த வேர்கள் எல்லாம் தரையை வெடித்துக் கொண்டு வெளி வந்து ஒட்டு மொத்த பகுதியே பச்சைப் பசேலென்று ஆகிவிடுவதைப் போன்று மறுமை நாளன்று முந்தைய, பிந்தையக் காலங்களில் மாண்டு போன மனிதர்கள் அனைவரும் வல்லோன் அல்லாஹ்வின் ஒற்றை சமிக்ஞையால் உயிர் பெற்று எழுந்துவிடுவார்கள்.

20. குறைஷித் தலைவர்கள் தங்களின் செல்வாக்கையும் மதிப்பையும் தக்க வைத்துக் கொள்கின்ற நோக்கத்துடன்தான் நபிகளாருக்கு எதிராக சூழ்ச்சி, சதி என அனைத்தையும் செய்துகொண்டிருந்தார்கள் என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். நபிகளாரின் பேச்சு எடுபட்டுவிட்டதெனில் தங்களின் மேலாதிக்கம் நொறுங்கிவிடும்; தங்களின் செல்வாக்கு அழிந்து போகும்; அரபு மக்கள் மத்தியில் தங்களைப் பற்றிய மதிப்பச்சமும் பிம்பமும் மண்ணோடு மண்ணாகிப் போகும் என்றே அவர்கள் நினைத்தார்கள். இதற்குப் பதில் தருகிற விதத்தில், 'இறைவனுக்கு அடிபணிய மறுத்தும், இறைவனுக்கு எதிராகக் கலகம் செய்தும் நீங்கள் உருவாக்கி வைத்திருக்கின்ற மரியாதையும், மதிப்பும் உண்மையில் பொய்யான மதிப்பும் மரியாதையும் ஆகும். அது அழிந்தே தீரும் என்பதுதான் விதி. ஏக இறைவனுக்கு மட்டுமே அடிபணிந்தும் வழிபட்டும் வருகின்ற போதுதான் இந்த

28ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

விலகி ஓட வேண்டியவர்கள் உறங்கிக் கிடக்கலாமா?

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நான் நரக நெருப்புக்கு இணையான யாதொன்றையும் பார்த்ததில்லை. அதனை விட்டு விலகி ஓட வேண்டியவர்களோ உறங்கிக் கிடக்கின்றார்கள். மேலும் சுவனத்துக்கு இணையான யாதொரு பொருளையும் பார்த்ததில்லை. அதனைப் பெறுவதில் மோகம் கொள்ள வேண்டியவர்களோ உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றார்கள்.'

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)

நூல் : திர்மிதி

இதென்ன விந்தை! நாசத்தை ஏற்படுத்துகின்ற திறனிலும் சரி, கடுமையிலும் சரி, குலைநடுங்கச் செய்து பீதியில் ஆழ்த்துவதிலும் சரி ஈடு இணையற்றதாய் நரக நெருப்பு இருக்கின்றது. ஆனால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் அதிலிருந்து வெகு தொலைவு ஓடிச் செல்வதற்கும் மக்கள் முயல்வதே இல்லையே.! இதே போன்று வேண்டி விரும்பத்தக்க பொருள்களில் சுவனத்துக்கு ஈடானதாய் வேறு எதையும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அதனை அடைவதற்கான பாதையில் அலட்சியமும் சோம்பலும் ஒருபோதும் முட்டுக்கட்டைகளாய் இருப்பதற்கான சாத்தியமே இல்லை. ஆனால் எந்த மக்களுக்காக சுவனமே படைக்கப்பட்டதோ அவர்களே அந்தச் சுவனத்துக்குச் செல்வதற்கான பாதையின் பக்கம் ஏறெடுத்தும் பார்க்காதவர்களாய், அதனை அடைய வேண்டும் என்பதில் அக்கறையோ ஈடுபாடோ இல்லாதவர்களாய் இருப்பது எத்துணை பெரும் விந்தை!

சுவனமோ அனைத்து அருள்வளங்களின் கேந்திரமாக, எல்லாவகையான நற்பேறுகளின் இருப்பிடமாக, அனைத்துவிதமான சிறப்புகளின் மையமாக இருக்கின்றது. என்றாலும் அதனை அடைய வேண்டும் என ஆசைப்படாமல் அற்பமான, சொற்பமான, தற்காலிகமான உலக இன்பங்களின் பின்னால் பைத்தியம் பிடித்து அலைபவர்களாக இந்த மக்கள் இருக்கின்றார்களே! என்ன செய்கின்றோம், அதனால் எத்தகைய விளைவுகளையெல்லாம் எதிர்கொள்ள நேரிடும் என்பதை இம்மியளவுகூட உணராதவர்களாய்த் தாம் அவர்கள் இருக்கின்றார்கள்.

நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்வதும் அதிலிருந்து வெகுதொலைவு ஓடிச் செல்வதும் பாவங்களிலிருந்து விலகிச் செல்வதைக் குறிக்கும். மேலும் இந்த உலக வாழ்வில் இறைப் பற்றையும் இறையச்சத்தையும் மேற்கொண்டு பேணுதலோடும் விழிப்போடும் வாழ்வதையும் அது குறிக்கும். மேலும் இறைவனுக்கு அடிபணிந்தும் அவனுடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்தும் வாழ்வதைத் தம் மீது கட்டாயமாக்கிக் கொள்வதையும் அது குறிக்கும்.

சுவனத்தில் இடம் கிடைக்க வேண்டும் என்கிற பேரார்வமும் பெரு மோகமும் கொண்டு அதற்காக ஓயாமல் ஒழியாமல் பாடுபடுதலுக்குப் பொருள், 'எங்கேயும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறைவனையும் இறைவனின் உவப்பைப் பெறுவதையும் மட்டுமே முன் நிறுத்திச் செயல்படுவதாகும். மேலும் பாவங்களிலிருந்தும் இறைவனுக்கு மாறு செய்வதிலிருந்தும் முற்றாக விலகி இருப்பதாகும். மேலும் இந்த விவகாரங்களில் எந்த வகையான சோம்பலையும் தட்டிக்கழித்தலையும் தள்ளி வைப்பையும் ஒருபோதும் சகித்துக் கொள்ள மறுப்பதாகும்.'

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

உலகத்திலிருந்து மறுமை வரையில் ஒரு போதும் மங்காத உண்மையான கண்ணியமும் நிலையான மரியாதையும் கிடைக்கும். அல்லாஹ்வுக்குரியவராய் நீங்கள் ஆகிவிட்டீர்களெனில் உண்மையான கண்ணியமும் என்றும் முடிவுறாத மரியாதையும் உங்களுக்குக் கிடைக்கும். அவனுக்கு மாறு செய்வீர்களேயானால் இழிவுக்கும் கேவலத்துக்கும் தாம் ஆளாவீர்கள்' என்று சொல்லப்படுகின்றது.

21. இதுதான் கண்ணியத்தை அடைவதற்கான உண்மையான வழிவகை ஆகும். பொய்யான, இழிவான, கலகம் விளைவிக்கின்ற மோசடித்தனமான சொல்லுக்கு அல்லாஹ்விடத்தில் ஒருபோதும் வெற்றியும் எழுச்சியும் வாய்ப்பதில்லை. உண்மையான, தூய்மையான, யதார்த்தத்தின் அடிப்படையிலான, நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் அதற்கும் மேலாக ஒரு தூய்மையான கோட்பாட்டையும் சரியான சிந்தனைப் போக்கையும் பிரதிநிதிப்படுத்துகின்ற சொல்தான் அல்லாஹ்விடத்தில் மேலே உயர்த்தப்படுகின்றது. அது மட்டுமின்றி ஒரு தூய்மையான சொல்லை மேலே உயர்த்திக் கொண்டு செல்வது அந்தச் சொல்லுக்கேற்ற செயல் ஆகும்.

சொல் தூய்மையானதாக இருக்க செயலோ அந்தச் சொல்லுக்கு நேர் எதிரான தாய் இருக்குமேயானால் அந்தச் சொல்லின் தூய்மை நிலையும்கூட தட்டுத் தடுமாறித் தேங்கி நின்றுவிடுகின்றது. நாவைச் சுழற்றி நல்ல நல்ல சொற்களைச் சொல்வதாலேயே எந்தவொரு சொல்லும் தூய்மையான சொல்லாக ஆகிவிடுவதில்லை. அது மேலே உயர்த்தப்படுவதற்கு நல்லறத்தின் உந்துசக்தி தேவைப்படுகின்றது.

இந்த இடத்தில் தூய்மையான சொல்லையும் நல்லறத்தையும் மகத்துவம் மிக்க குர்ஆன் ஒன்றையொன்று சார்ந்தவையாக தொடர்ந்து சித்திரித்து வருவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்தவொரு நல்லறமும் வெறுமனே அதன் வெளித் தோற்றத்தின் அடிப்படையில் நல்லறமாய் ஆகிவிடுவதில்லை. அதற்குப் பின்புலத்தில் தூய்மையான கோட்பாடு இல்லாத வரையில் அது நல்லறமாய்க் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. ஒருவர் எடுத்துரைக்கின்ற எந்தவொரு கோட்பாடும் அவருடைய செயலால் உறுதிப்படுத்தப்படாத வரையில் அது செயல்வடிவம் தரிக்காத வரையில் தூய்மையான கோட்பாடாய் அது ஆகிவிடுவதில்லை.

'நான் ஏக இறைவனுக்கு மட்டுமே அடிபணிந்தும் கீழ்ப்படிந்தும் இருப்பேன். அவனுக்கு இணை துணையாக எவரையும் எதனையும் ஆக்கிக் கொள்ள மாட்டேன்' என்று ஒருவர் நாவளவில் ஓங்கி முழங்குகின்றார்; ஆனால் நடைமுறை வாழ்வில் இறைவன் அல்லாதவற்றுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றார் எனில் அவருடைய அந்த நடத்தையே அவருடைய சொல்லைப் பொய்யாக்கி விடுகின்றது. 'மதுபானங்கள் அனைத்தும் ஹராமாக்கப்பட்டிருப்பதை நான் முழு மனதுடன் ஏற்கின்றேன்' என்று ஒருவர் நாவளவில் சொல்கின்றார்; ஆனால் நாள்தோறும் மது அருந்துகின்றார் எனில், அவருடைய அந்தப் பேச்சு மனிதர்கள் மத்தியிலும் எடுபடாது. இறைவனிடத்திலும் அது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

22. அசத்தியமான, கேவலமான சொற்களை ஏந்திக்கொண்டு களம் இறங்குகின்றார்கள்; அவற்றை தம்முடைய சாணக்கியத்தனங்களைக் கொண்டு, பொய்யும் வஞ்சகமும் நிறைந்த சூழ்ச்சிகளைக் கொண்டு, பார்வையை மறைக்கின்ற வாதங்களையும், மதியை மயக்குகின்ற வார்த்தை வீச்சுகளையும் கொண்டு மேலோங்கச் செய்வதற்காக முயல்கின்றார்கள். அவற்றுக்கு எதிரில் சத்திய வாக்கைத் தாழ்த்துவதற்காக மிக மிக மோசமான, இழிவான சதிச் செயல்களில் ஈடுபடுவதற்கும் தயங்குவதில்லை.

(தொடரும்)

● சேயன் இப்ராகிம்

கோட்டக்குப்பம் அஞ்சுமன் நூலகம் நூற்றாண்டு விழா

புதுச்சேரிக்கு அருகிலுள்ள கோட்டக்குப்பத்தில் 1-9-1926 அன்று அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம் என்ற ஒரு பொது நூலகத்தை அந்த ஊரைச் சார்ந்த காஜி அப்துல் ஹமீத் ஹாபிஸ் பாகவி உருவாக்கினார். 21 வயதே நிரம்பியிருந்த அந்த ஆலிம் பெருமகனார் உருவாக்கிய அந்த நூலகம் நூறாண்டை வெற்றிகரமாகக் கடந்து இப்போது விழா காண்கிறது.

காலனி ஆதிக்கக் காலத்தில், காலனி ஆதிக்கத்திற்கு எதிராக நாட்டில் ஒத்துழையாமை இயக்கமும், கிலாபத் இயக்கமும் மிக உச்சத்தில் இருந்த போது பொதுவாக முஸ்லிம்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிப் போயிருந்த ஒரு சூழலில் இந்த நூலகம் திறக்கப்பட்டது ஒரு புரட்சிகரமான செயலேயன்றி வேறில்லை. அந்த ஆலிம் பெருமகனார் ஒரு மிகச்சிறந்த கல்விப் புரட்சியாளர் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டில் முஸ்லிம்களால் நடத்தப்படுகின்ற விரல்விட்டு எண்ணக் கூடிய பொது நூலகங்களில் கோட்டக்குப்பம் அஞ்சுமன் நூலகம் முதன்மையானது. இந்த நூலகத்தில் பல அரிய வரலாற்று நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக முஸ்லிம்களால் நடத்தப்பட்ட வார, மாத இதழ்கள் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவது இந்த நூலகத்தின் சிறப்பம்சமாகும். முஸ்லிம்கள் குறித்து ஆய்வு செய்து வருகின்ற ஆய்வாளர்கள் இந்த நூலகத்திற்கு வருகை தந்து குறிப்பெடுத்துச் செல்கின்றனர். இதழ்களின் பிரதி எடுக்கவும் அனுமதிக்கப்படுகின்றனர். வருகின்ற ஆய்வு அறிஞர்களை நூலக நிர்வாகிகள் வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மனமுவந்து செய்கின்றனர். தமிழ் நாட்டிலுள்ள பல ஆய்வறிஞர்கள் இந்த நூலகத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.



இத்தகைய சீர்மிகு நூலகத்தின் நூற்றாண்டு விழா 2026 அக்டோபர் 23, 24, 25 மூன்று நாள்கள் புதுச்சேரியிலுள்ள காமராஜர் மணி மண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. மூன்று நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நிகழ்ச்சிகள் மிகச் சரியான முறையில் திட்டமிடப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. நினைவில் நிற்கும் விழாவாகவும் மன நிறைவு தரும் விழாவாகவும் அமைந்திருந்தது.

தனது நூற்றாண்டு விழாவோடு, சிராஜுல் மில்லத் ஆ.க.அ. அப்துல் சமது நூற்றாண்டு, இசைமுரசு இ.எம்.நாகூர் ஹனீபா நூற்றாண்டு, குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு, பொதுவுடமை இயக்க நூற்றாண்டு ஆகியவற்றையும் சேர்த்தே அஞ்சுமன் நூலகம் நடத்தியது. இது ஒரு வித்தியாசமான அணுகுமுறையாகும். மாநாட்டின் அரங்கங்களுக்கு நூற்றாண்டு நன்றி நவிலல், மாநாட்டுக் கொடியேற்றம், ஆய்வரங்க அமர்வுகள், ஆய்வரங்க நிறைவரங்கு, ஜென்ஸீ சிந்தனை அரங்கு, பராம்பரிய தப்ஸ் இசை, ஹாஜி நா.மு. இஸ்மாயீல் நூலக நூற்றாண்டு அரங்கு, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு அரங்கு, அஞ்சுமன் பயனர் அரங்கு, மகளிர் ஆற்றல் அரங்கு, இஸ்லாம் இசைமரபு, சமயச் சான்றோர் கூடல், விளிம்பு நிலை அரசியல் உரையாடல், கவியரங்கம், வாசிப்பு வாசல், நிறைவரங்கம் எனப் பெயரிடப்பட்டிருந்தன.





இந்த விழாவில் பேராசிரியர் சாயபு மரைக்காயர், அவரது துணைவியார் பேராசிரியை நசீமா பானு, கவிமாமணி பேராசிரியர் தி.மு. அப்துல்காதர், பேராசிரியர் பி.அப்துல் சமது, முனைவர் நா.இளங்கோ, பேராசிரியர் முஹம்மது ரபீக், பேராசிரியர் ஹாஜா கனி, நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், மௌலவி P.A. ஹாஜா மொய்னுதீன் பாகவி, அருட்தந்தை கிறிஸ்து ராஜாமணி, ஃபாத்திமா முஸப்பர், தமிழ்நாடு முற்போக்கு எழுத் தாளர் சங்கத்தின் செயலாளர் ஆதவன் தீட்சண்யா, பேராசிரியர் முனைவர் மு.அப்துல் காதர், பேராசிரியை ஷபானா பர்வீன், பேராசிரியர் கா.முஹம்மது இஸ்மாயீல், பேராசிரியர் அபுல் பாசல், பேராசிரியர் மு. சாகுல் ஹமீது, சமரசம் இதழின் பொறுப்பாசிரியர் வி.எஸ்.முஹம்மத் அமீன், இயக்குநர் மீரா கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தக்கலை ஹலீமா தலைமையில் நடைபெற்ற கவி யரங்கம் விழாவின் சிறப்பு நிகழ்வாக அமைந்தது. வெள்ளி இரவில் நடைபெற்ற யாசீன் ஃபைஜானி குழு வினரின் தப்ஸ் இசையும், சனிக்கிழமை இரவு நடை பெற்ற ராஜாபார்ட் ராஜா முஹம்மது குழுவினரின் பாடல் அரங்கும் நெஞ்சில் நிற்கும் நிகழ்வுகளாக அமைந்திருந் தன. பாடல் அரங்கை பேராசிரியர் ஹாமீம் முஸ்தபா சிறப்பான முறையில் வழி நடத்தினார்.



இயக்குநர் மீரா கதிரவனுக்கு கலைமாமணி தி.மு. அப்துல்காதர் விருது வழங்குகிறார்

முனைவர் நா. இளங்கோ, முனைவர் இனாமுல் ஹஸன், இயக்குநர் மீராகதிரவன், எழுத்தாளர் சமசுதீன் ஹீரா, வழக்கறிஞர் சா.லெனின் துரை, ஆலிஸ் தாமஸ், ஜெ.அனஸ், அப்துல் ரவூப், நூலகர் முஸ்தபா, நூலகர் ஷேக் இஸ்மாயீல் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் கலந்து கொள்வதாக இருந்த திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் வீரமணி கலந்து கொள்ளாத நிலையில் அவரது உரை காணொளி வாயிலாக விழாவில் ஒலிபரப்பப்பட்டது. அவர் சார்பாக புதுவை மாநில தி.க. தலைவர் பிரின்ஸ் N.R.S. பெரியார் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

விழாவில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்கள் அனைவரின் உரைகளும் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. குறிப்பாக அதிகம் அறிமுகம் இல்லாத சில பங்கேற்பாளர் களின் உரைகள் என் கவனத்தை ஈர்த்தன. (குறிப்பாக முனைவர் இனாமுல் ஹஸன், பேராசிரியை ஷபானா பர்வீன், ஆய்வாளர் தாஜ் ரிபா ஹபீப் ஆகியோர்). உணவு ஏற்பாடும், வெளியூரிலிருந்து வருகை தந்த பேராளர்களுக்கான தங்குமிடமும் மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டன. பழம்பொருள் கண்காட்சி அரங்கும் சிறப்பான முறையில் அமைந் திருந்தது.



அஞ்சுமன் நூலகத்தில் சமரசம் இதழ்த் தொகுப்புகள்

மூன்று நாள் நிகழ்வையும் மிகச் சிறப்பான முறையில் நடத்திய நூலகத்தின் பொதுச் செயலாளர் லியாகத் அலீயை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கடந்த மூன்று மாதங்களாக அவர் தனது நேரத்தையும், உழைப்பையும் கடுமையாக நல்கி விழாவின் வெற்றிக்கு உறுதுணை புரிந்துள்ளார். அவருக்குப் பெரிதும் துணை நின்ற நற்றமிழ் நாவலர் முனைவர் நா. இளங்கோ, சகோதரர்கள் சித்தீக் மரைக்காயர், ஜெ.முஹம்மது அனஸ், B. முஹம்மது இல்யாஸ் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள்.

தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் நடத்துகின்ற பொது நூலகங்கள் மிகக் குறைவு. ஒரு கன்னிமாரா நூலகம் போல, ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் போல, ஒரு பெரிய நூலகத்தை நிறுவச் சமுதாயம் முன் வர வேண்டும். அதுவே இந்த அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம் நூலகத்தின் நூற்றாண்டு விழா விடுக்கின்ற செய்தியாகும். நூற்றாண்டு கண்ட அஞ்சுமன் இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்து



நின்று இயங்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்வை இறைஞ்சுகிறேன்.

அஞ்சுமன் நூற்றாண்டு விழாவுக்கு 'அறிவுத் திருவிழா' எனப் பெயரிட்டுள்ளனர். இது உண்மையில் ஓர் அறிவுத் திருவிழாவே. முஸ்லிம்களிடையே வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைந்து போய்க் கொண்டிருக்கிறது. சுவாசிப்பு ஒரு மனிதனை உயிரோடு வைத்திருக்கிறது. வாசிப்பு ஒரு மனிதனை உயிர்ப்போடு வைத்திருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து வாசிப்பை நேசிக்கின்ற, வாசித்து வாழ்கின்ற சமுதாயமாக நம் சமுதாயம் மாற வேண்டுமென்பதே அஞ்சுமன் நூற்றாண்டு விழா நமக்கு உணர்த்துகின்ற செய்தியாகும்.

HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

ஓர் இயக்கம் வெற்றி பெற தொண்டர் படை மட்டும் போதாது!

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்
அகில இந்தியத் தலைவர்
சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனியை
RSS நூற்றாண்டையொட்டி தஅவத் இதழுக்காக டாக்டர் ஃபஹீமுத்தீன் நிகழ்த்திய நேர்காணலின் தொடர்ச்சி

தமிழில் : Dr. கலீலுர் ரஹ்மான் MBBS., MS.,

- **பிற இயக்கங்கள் RSSஸின் நூறாண்டுப் பயணத்தில் என்ன படிப்பினைகளைப் பெறலாம்?**

RSSஸின் நூறாண்டுப் பயணத்தில் பிற இயக்கங்கள் கற்கவும் எச்சரிக்கை பெறவும் வேண்டும். அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தத் தலைப்பு குறித்து மிக விரிவான ஆய்வுடன் கூடிய நீண்ட பதில் தர வேண்டும். ஆனால் இங்கு சுருக்கமாக ஒரு சில தலைப்புகளின் கீழ் பதில் தர விரும்புகிறேன்.

முதல் பாடம்: உணர்ச்சிவசப்பட்டு முன் யோசனை இன்றி எதிர்வினை ஆற்றுவ தையோ செயல்படுவதையோ கட்டுப்படுத்துதல். நிலையான நீண்ட நெடிய விடாமுயற்சி யைப் பேணுதல். இதைத்தான் குர்ஆனில் ஸப்ர் (பொறுமை) என அல்லாஹ் குறிப்பிடு கிறான். சமூக முன்னேற்றத்தின் சூட்சுமமாக அதனை அல்லாஹ் குறிப்பிடுகிறான். பகட்டு களைத் தவிர்த்து மௌனமாக உழைக்கின்ற கலையும் பல தோல்விகளை, குறிப்பாக தேர்தல் தோல்விகளைச் சந்தித்தாலும் தோய்ந்துவிடாமல் விடாப்பிடியாக விடாமுயற்சி யையும் தங்கள் சித்தாந்தத்தில் ஆழ்ந்த நம்பிக்கையையும் புதுப்பித்தலும் எதிர்ப்பின் புயல் சுழன்றடித்த போதும் பற்றுதியின் சுடரை அணையாமல் காப்பதிலும் தளராத மனமும் அவர்களிடமுள்ள நல்ல பண்புகள். அவர்களது அதிகம் பேசாத அமைதியும் விளம்பர வெளிச்சம் தேடாத தன்மையும் கவனத்தில் கொள்ள வேண்டிய பண்புகள். அவசியமான வேளையில் மௌனம் காப்பது ஒரு திறன். அது போல புகழ் தேடாமல் பிறர் கவனத்தை ஈர்க்காமல் பணி செய்வதும் மற்றுமொரு திறன்.

இரண்டாவது பாடம்: சித்தாந்த இயக்கங்களின் அரசியல் தாக்கம் என்பது ஆழமான சமூக சித்தாந்த வேர்களோடு தொடர்புடையது. முதல் நாளில் இருந்து அரசியல் முழக்கங்களை எழுப்புவதால் அரசியல் அதிகாரத்தைப் பெற முடியாது. அவர்களது அரசியல் பலம் சமூக நாகரிக கலாச்சாரக் கூறுகளோடு ஆழமான தொடர்புடையது. அவற்றில் மாற்றங்களைக் கொண்டுவருதற்கு மிக நீண்ட பொறுமையும் நிலைத்ததுமான தீவிர முயற்சி வேண்டும். அப்போது அரசியல் அதிகார நோக்கங்கள் இல்லாதது போல காட்டிக் கொள்ள வேண்டியதிருக்கும்.

மூன்றாவது பாடம்: நிறுவனங்களின் உருவாக்கத்தை மேற்கொண்டால்தான் சமூகத்தின் சிந்தனையிலும் கருத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தைக் கொண்டு வர முடியும். நிறுவனங்கள் விளைவை ஏற்படுத்த வேண்டும் என்றால் இரண்டு நிபந்தனைகளைப்

பூர்த்தி செய்ய வேண்டும். அவை நிறுவனங்கள் மாற்று நாகரிகத்தின் கனவைப் பற்றி தெளிவாக எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும். நிறுவனங்களில் தற்போது நிலவும் பணி நிலை சமூக மாற்றத்தை ஏற்படுத்தாது. ஒன்றுக்கொன்று தொடர்புடைய வாழ்வின் எல்லாக் கட்டங்களுக்கும் தேவையான நிறுவனங்கள் ஒன்றிணைந்து மாற்று நாகரிக கலாச்சாரத்தைப் பற்றிய பார்வையைத் தர வேண்டும்.

நான்காவது பாடம்: கட்டுப்பாடு மிக்க தொண்டர் படைக்கு பயிற்சியளிப்பது மிக முக்கியம். இயக்கங்கள் கும்பல்களைச் சேர்ப்பதால் செழித்து வளர்வதில்லை. கூட்டம் சேர்ப்பது என்பது இரண்டாம் பட்சம். முதல் நிலை வகிப்பது அர்பணிப்பும் செயலூக்கமும் நிறைந்த தங்கள் திறன்களையும் வாய்மையுடன் தங்கள் ஆற்றல்களையும் சுயநலமில்லா கட்டுப்பாட்டையும் வளர்த்துக் கொள்கிற ஊழியர்கள்தான். இது இல்லாமல் எந்தப் பெரிய கூட்டமாக இருந்தாலும் விளைவுகள் ஏதும் இருக்காது.

ஐந்தாவது பாடம்: தலைமைத்துவம் என்பது பளபளப்பும் மினுமினுப்பும் உடைய பெரிய இமேஜோ பிம்பமோ முழக்கங்களோ மொழியால் விளையாடும் பேச்சுத் திறனோ பெரும் ஊர்வலங்களோ ஆர்ப்பாட்டங்களோ குடும்ப கௌரவமோ பாரம்பரியப் பெருமையோ அல்ல. தலைமைத்துவத்தின் முதல் கூறு தன்னலமற்ற வாய்மையும் தியாகமும்.

இரண்டாவது மதிநுட்பமும் நுண்ணறிவும் உணர்ச்சிவசப்படாத உளப்பாங்கும். அவர்கள் உடல் பொருள் உயிர் சொந்த ஆசாபாசங்கள் மட்டுமல்ல அவர்களது வாய்மையும் (sincerity) தன்னலமற்ற குணமும் தங்கள் பதவியை விட்டுக் கொடுப்பதிலும் புகழைத் தியாகம் செய்வதிலும் தன் அந்தஸ்தை விட்டுக் கொடுப்பதிலும் வெளிப்படுகிறது. அவர்கள் தாங்கள் பிழைத்து முன்னேற முனையும் தொழிலை வேலையை விட்டு விடத் தயாராக இருக்கிறார்கள். புகழ் வெளிச்சத்தில் இருந்து விலகி இருக்கவும் தயாராக இருக்கிறார்கள். உண்மையைப் பேசி மற்றவர் கோபத்தை சம்பாதித்துக் கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள். இவையெல்லாம் வாய்மை தன்னல மற்ற தன்மையினதும் தியாகத்தினதும் பல வேறு வடிவங்கள்.

மதிநுட்பம் உணர்வு இயல்பு என்றால் சிந்தையிலும் சித்தாந்தத்திலும் உறுதியான அறிவும் ஆழமான அகப்பார்வையும் உடையவர்களாக இருக்கிறார்கள். சூழ்நிலைகள் பற்றி ஆழமான புரிதல் உடையவர்களாக இருக்கிறார்கள். சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்கும் ஆற்றல் படைத்தவர்களாக உள்ளார்கள். சடுதியில் வாய்ப்புகளைக் கண்டுகொண்டு உடனடியாக வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் திறன் அவர்களிடம் உண்டு. புதிய பாதைகளை ஆய்ந்து பார்க்கிறார்கள். புதுமையான தீர்வுகளைக் கண்டறிகிறார்கள்.

அவர்களிடமிருந்து செய்யக்கூடாதது என எச்சரிக்கைகளின் பெரும் பட்டியல் உண்டு. ஆனால் அவற்றிலிருந்து ஒன்றைச் சொல்வது போதுமானது எனக் கருதுகிறேன். இயக்கங்களுக்குப் பொறுமையும் நிதானமும் காத்திருத்தலும் சுயகட்டுப்பாடும் சோதனையான காலகட்டத்தில் இருப்பதோடு வெற்றியைச் சுவைக்கும் போது அதிகமாக இருக்க வேண்டும். வெற்றியின் போது அவசரப்படுதலும் முழு அதிகாரத்தை அடையும் வேகத்தில் கொள்கையில் சமரசம் செய்து கொள்தலும் பல ஆண்டுகள் நிலைத்த உழைப்பின் பலன்களை வெறுமனே வெற்றிக் களிப்பை அனுபவிக்கும் தருணமாக மாற்றி விடும். இறுதிக் கட்டத்தில் காட்டப்படுகிற இந்த பதற்றத்துடன்



கூடிய அவசரம் இறுதியாக வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

RSSஸின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் மற்று மொரு காரணி அதன் சித்தாந்தத்தின் வெற்றுத் தன்மையும் அதன் ஒடுக்குமுறை, அநீதியின் சார்பும். மேலும் ஆணவம் தற்பெருமை போன்ற தார்மிக நெறிகளற்ற தன்மையும் ஆகும். மற்றுமொரு பெரிய எச்சரிக்கை என்னவென்றால் ஓர் இயக்கம் தொடர்ந்த நிலையான முன்னேற்றம் காண நல்ல வியூகமும் நல்ல ஆற்றல் வாய்ந்த தொண்டர் படை மட்டும் இருந்தால் போதாது நல்ல சத்திய சிந்தனையும் குறிக்கோளும் வேண்டும்.

இவையே RSSலிடமிருந்து இயக்கங்களும் குறிப்பாக இஸ்லாமிய இயக்கங்களும் கற்க வேண்டிய பாடமும் பெற வேண்டிய எச்சரிக்கைகளும் ஆகும்.

- **RSSஸின் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் கருத்தில் கொண்டு இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?**

கூட்டான நார்ஸிசம் அதாவது தற் பெருமை, இனவாதப் போக்கு, தன்நலம் என்பதைச் சுற்றி அமைகிற சிந்தனை, கூட்டுப் பொறாமை, வரலாற்றின் மீது கொள் கிற கோபமும் அதற்காகப் பழி வாங்கலும் போன்ற எதிர்மறையான மனப்போக்கால் தான் தீவிரவாத இயக்கங்கள் கட்டமைக் கப்படுகின்றன. கும்பல் வெறியையும் சமூகத்தில் ஓர் எதிரியைக் கட்டமைத்து அச்சத்தை ஏற்படுத்தியும் சாதகமான சூழ் நிலைகளில் வெற்றி பெற்று அதிகாரத்தை அடைந்துவிடலாம். அது நிரந்தரம் அல்ல. அந்த வெற்றியையும் வெறியையும் நீடிக்க உதவுவது அதற்கு எதிர்வினையாகக் கிளம் பும் எதிர் வெறிதான்.

மிகப்பெரும் மாற்றங்கள் நிகழ்வதற்கு முந்தைய நிலை எதேச்சதிகாரம், கொடுங் கோன்மை, ஒடுக்குமுறை, கலகம், குழப் பங்கள் நிறைந்த காலகட்டமாக இருக்கும் என்று வரலாறு காண்பிக்கிறது. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் இருந்த ஃபாசிஸம், பால் கனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் இருந்த தேசிய இனவாதம் கம்யூனிஸ நாடுகளில் இருந்த எதேச்சதிகாரம் இறுதியாக அந்தப் பகுதிகளை நீதி, மனித உரிமை, ஜனநாயக சீர்திருத்தம் போன்றவற்றில் புதிய சகாப்தத் திற்குக் கொண்டு சென்றது. பெரும்பாலும் ஃபாசிஸம், தேசிய இனவாதம், எதேச்சதி காரம் போன்றவைதான் நிலைத்த மாற்றத்தின் களத்திற்கு உரமாகத் திகழ்கின்றது.

நம் நாட்டிலும் மத துவேஷிகளின் வெறுப்பு வியாபாரத்தின் முடிவில் அடிப் படை சீர்திருத்தங்களே விளையும் என நம்பு கிறேன். இந்த அனுபவங்களின் ஒளியில் நாடு நிலைத்திருப்பதற்கு ஒரே வழி சமத்துவமும் நீதியும் இணக்கமும் இருக்க வேண்டும் என்பதை நிர்பந்தமாக மக்கள் உணர்ந்து கொள்வார்கள். நாட்டு மக்கள் உறுதிமிக்க மாற்றங்களுக்குத் தயாராகி விடுவார்கள். அந்தக் காலகட்டத்திற்கு முஸ்லிம்கள் தயா ராகக் காத்திருக்க வேண்டும். இதற்கு ஆறு அம்சத் திட்டத்தை எனது நூலில் பரிந்துரை செய்திருக்கிறேன்.

1) வெறித்தனமான எதிர்வினைகளைத் தவிருங்கள்

ஒரு புறம் உணர்ச்சிவசப்பட்ட நிலை யில் எதிர்வினை ஆற்றுதலும் பித்துக் குளித் தனமான பழிவாங்கல் நடத்தையும்! மறு புறம் பயம் அச்சம் ஊக்கமிழந்து சோர்ந்து போதல், தன்னம்பிக்கை கைவிடல் என்கிற இரண்டு நிலைகளும் இந்தப் புயல் நீடிக்க உதவும். இந்த இரண்டு நிலைகளையும் தவிர்க்க வேண்டும். விடாமுயற்சி, நிலை குலையாமை, பொறுமை, விவேகம் இவற் றுடன் கூடிய போராட்டம் என்கிற நிலைப் பாட்டை கைக்கொள்ள வேண்டும். இந்தச் சூழ்நிலைகள் முஸ்லிம்களுக்குத் தரும் பரி சாக இது அமையும்.

2) இஸ்லாத்தின் செயல் சான்றில் நம் கவனம் குவிந்திருக்க வேண்டும்

உபதேசங்கள், சேவைகள், தனிப்பட்ட வரின் நன்னடத்தை கூட்டாக சமூகமாக

நற்பண்புகளை வெளிப்படுத்தல் ஆகிய வற்றின் மூலம் இஸ்லாத்தை அறிமுகப்படுத்த வேண்டும். இப்படி இஸ்லாத்தின் முன் மாதிரியை மக்களுக்குத் தெளிவாக்க வேண்டும்.

3) நீதி நேர்மையான புதிய அரசியலை வளர்ப்பது

நமது அரசியல் அடையாள அரசியல் என்கிற சக்கரத்தைத் தாண்டிச் செல்ல வேண்டும். வெளிப்பகட்டுக்காகக் காட்சிப் படுத்துவதற்காகச் செய்யப்படுகிற மதச் சார்பற்ற அரசியலாக இருக்கக் கூடாது. இது தான் இன்று நியமமாக உள்ளது. அப்படி இருக்கக் கூடாது. இதன் நாசகர மான விளைவுகள் நன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது. 1857 முதல் இதனால் பாதிக்கப்பட்டுள் ளார்கள். இப்போது நீதியின் நிரலால் தூண் டப்பட்ட அரசியலின் புதிய சகாப்தம் தொடங்க வேண்டும். அதிலே சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் நலம் பயக்கும் நிரல் தெளிவாக இடம் பெற வேண்டும்.

4) நிறுவனங்களை நிறுவுதல்

பொறுமையாக உறுதி மிக்க நிறுவனங் களை வாழ்க்கையின் எல்லா வட்டங்களிலும் பலமாக நிறுவுதல். அவை இஸ்லாத்தில் கூட்ட மைப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டிய கருத்துகளுக்குச் சாட்சியாக காலங்கடந்து விளங்கும். அவற்றால் மட்டுமே அந்தக் கருத்துகளுக்குச் செயல் வடிவம் தர முடியும். தனி மனிதர்கள் போய்விடுவார்கள். ஆனால் நிறுவனங்கள் அவர்களைத் தாண்டி நிற்கும். அதன் நிறுவனர்கள் கட்டுப்பாட்டுடனும் பல தியாகங்கள் புரிந்தும் வாழ்நாள் முழுக்க அதன் மீது கவனத்தைக் குவித்து வளர்த் தெடுக்க வேண்டும்.

5) பெரும்பான்மையினரோடு தொடர் பேச்சுவார்த்தை வேண்டும்

எல்லா நிலைகளில் உள்ளவர்களுடனும் உரையாடலில் ஈடுபட வேண்டும். இஸ்லாத் தின் போதனைகள் தெளிவாகும் வண்ண மும் நாம் பரிந்துரைக்கும் நீதியின் மாண்பு களுடனும் நேர்மையுடனும் எல்லாருடைய நன்மையில் அக்கறை கொண்டதுமான ஒரு

நம் குரல் அச்சத்தின் குரலாகவோ புகார்களின் புலம்பலாகவோ இருக்கக் கூடாது. நம் அடையாளத்தின் பெருமிதத்தில் மிதப்பதோ பழிவாங்கும் உணர்வில் எரிந்து போவதோ கூடாது. நம்முடைய முயற்சிகள் நாட்டின் மனசாட்சியாகிவிட வேண்டும்.

மித்த கருத்து வரும்படியாக பேச்சுவார்த்தை யில் ஈடுபட வேண்டும். தனது சமூகம் பற்றிய பிரச்னைகள் என்கிற பார்வை இல்லாமல் எல்லா தரப்பு மக்களையும் சென்றடையும் வண்ணம் செயல் பட வேண்டும்.

6) விரிவான ஈடுபாடும் ஒத்துழைப்பும் ஒருங்கிணைந்த கூட்டணியும் வேண்டும்

இந்தப் பேச்சுவார்த்தைகள் அதிகபட்ச மாக பல்வேறுபட்ட பிரிவினருடன் அமைய வேண்டும். அதன் மூலம் எல்லாருக்கும் பொதுவான இலக்குகளைக் கண்டடையவும் அந்த இலக்குகளை அடைய கூட்டாகக் கடும் முயற்சிகளை மேற்கொள்ளும் உளக் கிடக் கையையும் ஏற்படுத்த வேண்டும்.

நம் குரல் அச்சத்தின் குரலாகவோ புகார் களின் புலம்பலாகவோ இருக்கக் கூடாது. நம் அடையாளத்தின் பெருமிதத்தில் மிதப்பதோ பழிவாங்கும் உணர்வில் எரிந்து போவதோ கூடாது. நம்முடைய முயற்சிகள் நாட்டின் மனசாட்சியாகிவிட வேண்டும். நம்முடைய குரல் நீதியை, கருணையை, சமத்துவத்தை எல்லாருடைய நெஞ்சங்களிலும் எதிரொலிப் பதாக இருக்க வேண்டும். பிரிந்துகிடக்கும் பல பிரிவினரையும் ஒற்றுமைப்படுத்தும் சக்தியாக திகழ வேண்டும்.

நமது இலக்கும் வழியும் இப்போது நில வும் வெறுப்பைப் பிரதிபலிப்பதாக இருக்கக் கூடாது. ஆனால் அதற்குத் தீர்வளிப்பதாக இருக்க வேண்டும். இது நடக்க முடியாத கனவு அல்ல. இப்பொழுது நிலவும் சூழல் இதற்கான அதிக சந்தர்ப்பத்தை உருவாக்கியிருக்கிறது. இதைச் சாதிக்க முடியும். முஸ்லிம்கள் இந்தச் சவால்களை பிரம்மாண்டமான வாய்ப்பாக மாற்ற வேண்டும்.

காணாமல் போன மாணவர் மன்றங்கள்

– மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ
மாநிலத் தலைவர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

2026 அக்டோபர் 29 அன்று சென்னை IIC அரங்கத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தின் அறிக்கை

பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்: வன்மையான கண்டனங்கள்

சென்னையில் குறுகிய கால இடைவெளியில் இரண்டு பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. சென்னை கோயம்பேடு ஜெய்நகரில் மஸ்ஜிதே ஷா நூர் பள்ளிவாசலும் சென்னை வடபழனி கங்கை அம்மன் கோயில் தெரு பள்ளிவாசலும் தாக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். இந்தத் தாக்குதல்களைத் தொடுத்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதே சமயம் இவர்களுக்குப் பின்புலமாக இருந்தவர்கள் யார் என்கிற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று காவல் துறையினரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்கள் நிகழாமல் தடுக்கின்ற வகையில் குற்ற வாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அமைதிப் பூங்காவாக இருக்கின்ற நம்முடைய மாநிலத்தில் அமைதியைக் குலைக்கக்கூடிய இத்தகைய கொடூர நிகழ்வு களை முளையிலேயே கிள்ளி எறிவது அவசியமாகும். வட மாநிலங்களில்தான் இது போன்ற கொடுமைகள் நிகழ்ந்து வந்துள்ளன. நம்முடைய மாநிலத்தில் இவை அரங் கேறுவதற்கு ஒருபோதும் இடம் தரக்கூடாது.

இந்தத் தருணத்தில் இது போன்ற கொடூரக் குற்றங்களை முதலிலேயே தடுக்கத் தவறியதால் வட மாநிலங்களில் குறிப்பாக பாஜக ஆளுகின்ற மாநிலங்களில் எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரதமரின் இல்லம் இருக்கின்ற லோக் கல்யாண் மார்க் சாலையில் (முந்தைய ரேஸ் கோர்ஸ் ரோடு) உள்ள 150 ஆண்டு கால பள்ளிவாசல் எந்நேரமும் இடிக்கப் படலாம் என்கிற அச்சுறுத்தலைச் சந்தித்து நிற்கின்றது. தலைநகரத்தில் பிரதமரின் இல்லத்துக்கு அருகில் 150 ஆண்டு பழமையான பள்ளிவாசலுக்கே இந்த நிலைமை என்றால் மற்ற இடங்களின் நிலைமையைச் சொல்லவா வேண்டும். உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான், ஹரியானா என வட இந்தியாவின் பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்கள் குறிவைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல இடிக்கப்பட்டுள்ளன.

2014இல் பாஜக அரசு பதவியேற்ற போது முதல் ஐந்தாண்டுகளில் தனி மனிதர்கள் குறி வைக்கப்பட்டார்கள். அடித்தே கொல்லப்பட்டார்கள். அதனைக் காணொளிகள் எடுத்துப் பரப்பினார்கள். புனேவின் சாதிக், தாத்ரியின் முஹம்மத் அக்லாக், ஜார்க்கண்டின் மஸ்லூம் அன்சாரி, இம்தியாஸ் கான், இராஜஸ்தானின் பெஹ்லூ கான், ஹரியானாவின் ஹாஃபிஸ் ஜுனைத் என்று இந்தப் பட்டியல் நீளுகின்றது.

2019இல் பாஜக மீண்டும் ஆட்சியைப் பிடித்த போது கடைகளும், முஸ்லிம்களின் வீடுகளும் குறி வைக்கப்பட்டன. தில்லியின் ஜஹாங்கீர் பூரி, மத்தியப் பிரதேசத்தின்

கார்கோன் நகரம், உத்தரப்பிரதேசத்தின் பிரயாக் ராஜ் நகரம், ஹரியானாவின் நூஹ் நகரம் என இன்னும் ஏராளமான இடங்களில் முஸ்லிம்களின் வீடுகள் இடிக்கப்பட்டன. இவ் வாறாக புல்டோசர் கொண்டு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வீடுகள் இடிக்கப்பட்டதாக ஃபிரண்ட்லைன் பத்திரிகை நீண்ட கட்டுரை ஒன்றையே வெளியிட்டது.

இப்போது 2024இல் மறுபடியும் என்டிஏ அரசு பதவியேற்றதில் இருந்து பள்ளி வாசல்கள், தர்காக்கள், ஈத்காக்கள் குறி வைக்கப்பட்டு வருகின்றன. ஏராளமான வழி பாட்டுத்தலங்கள் இடிக்கப்பட்டுவிட்டன.

வட நாட்டில் தொடர்கின்ற இந்தப் பெருந்துயரம் மிகவும் வேதனையை அளிக்கின்றது. நம்முடைய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் பொறிக்கப்பட்டுள்ள சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், நீதி, மதச் சார்பின்மை போன்ற மாண்புகளைச் சுக்குநூறாக உடைதெறிகின்றவையாய் இந்த அவலங்கள் இருக்கின்றன. இந்தப் பெருங் கொடுமைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். வெறுப்புக்குப் பதிலாக அன்பும், சகிப்பின்மைக்குப் பதிலாக சகிப்புத் தன்மையும் செழித்தோங்குவதற்காகவும் நீதியும் சட்டத்தின் ஆட்சியும் நிலை பெறுவதற்காகவும் எல்லோரும் ஒன்றிணைந்து பாடுபடுவது காலத்தின் கட்டாயமாகும்.

அகிலனின் மரணம் எழுப்புகின்ற கேள்விகள்

கோவை பீளமேட்டில் 11ஆம் வகுப்பு மாணவர் அகிலனின் தற்கொலை வேதனை அளிக்கின்றது. சாதியின் அடிப்படையிலான ஆதிக்க மனப்பான்மை எந்த அளவுக்கு அவர் அவர் மனதைக் காயப்படுத்தி இருக்க வேண்டும் என்கிற நினைப்பே நெஞ்சம் கனக்கச் செய்கின்றது.

இந்த விவகாரத்தில் இரண்டு மாணவர்களும் ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டு, சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பள்ளி தலைமையாசிரியரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றார். அகிலனின் குடும்பத்தாருக்கு இழப்பீடும் வேலைவாய்ப்பும் தரப்பட்டிருக்கிறது. என்றாலும் நெஞ்சம் கனக்கச் செய்கின்ற இந்த இளம் மாணவனின் மரணம் ஏராளமான கேள்விகளை எழுப்புகின்றது.

என்று தணியும் இந்தச் சாதி வெறி? பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் இந்த இழிநிலையிலிருந்து மக்கள் விடுதலை பெறுவது எப்போது? சாதி எனும் கொடூர அரக்கனின் பிடியிலிருந்து தமிழ்நாட்டை மீட்டெடுப்பது எப்போது? 'பிறப்பொக் கும் எல்லா உயிர்க்கும்' 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' போன்ற மாண்புகள் செழித்தோங்கிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட மாநிலத்தில் சாதியின் அடிப்படையில் மக்களையும் மக்களின் உணவுப் பழக்கங்களையும் கேவலமாக நினைக்கிற இழிவான மனோ நிலையிலிருந்து மக்களுக்கு விடுதலை கிடைப்பது எப்போது?



தமிழ்நாட்டை திரை மயக்கத்திலிருந்து விடுவிப்பது காலத்தின் கட்டாயம்

திரைப்பட நடிகர் தனுஷ் திடீரென்று அரங்கேற்றிய மகளிர்

சந்திப்பு நிகழ்வு அரசியல் வட்டாரங்களில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. தனுஷின் நிகழ்வில் திரளாகத் திரண்ட பெண் ரசிகைகளின் பட்டாளமும், எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட வெள்ளியால் ஆன காமாட்சி அம்மன் குத்து விளக்கும் அதன் கீழே பொறிக்கப்பட்டிருந்த 'தாமரை' படமும் தனுஷின் அரசியல் வருகையை அமர்க்கள மாக்கியிருக்கின்றன. தமிழக எழுச்சிக் கழகம் என்கிற பெயரில் கட்சி தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு புறம் இருக்க நடிகர் சிவகார்த்திகேயன் அரசிய லில் அடியெடுத்து வைக்க இருப்பதாக வரும் செய்திகளையும் புறந்தள்ளிவிட முடியாது.

திரை மோகமும், திரை மயக்கமும், திரை போதையும் தமிழ்நாட்டு மக்களை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கின்றன என்பதைத் தான் இது வெளிப்படுத்துகின்றது. 1950 களின் இறுதியிலும் 1960களிலும் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் மிகப்பெரும் சக்தியாக வளர்ந்தோங் கியதற்குத் திரைப்படங்களும் நாடகங்களும் தாம் காரணம் என்கிற கருத்து திமுக ஆட்சி யைப் பிடித்த காலத்திலிருந்தே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வருகின்றது.

ஆனால் இது பாதி உண்மைதான். திமுக வின் அரசியல் எழுச்சிக்கு பக்கபலமாக சமூக நீதி, சாதி ஒழிப்பு, மனித மாண்பு, மனித உரிமைப் பாதுகாப்பு, உரிமைக்காகக் குரல் கொடுத்தல் போன்ற மாண்புகளைத் தூக்கிப் பிடிப்பவையாய் திரைப்படங்களும் திரைக் கதைகளும், பாத்திரப் படைப்புகளும் இருந்த தால் தான் திரை நட்சத்திரங்கள் மக்களிடம் செல்வாக்கு பெற்றார்கள் என்பதுதான் முழு உண்மை. வலுவான சமூக, அரசியல், பொரு ளாதார நிலைமைகளும், மக்களை ஈர்க்கின்ற சித்தாந்தமும் இதற்குத் துணை நின்றன என்பதுதான் யதார்த்தம்.

திரையுலகத் தொடர்பைக் கொண்டு ஆட்சியதிகாரத்தை வென்றெடுப்பதற்கான சாத்தியம் இருப்பதால் இதர நட்சத்திரங்களும் இந்தச் சபலத்துக்கு ஆளாகின்றார்கள் என்பதும் யதார்த்தமான உண்மை. எம்ஜிஆர் காலத்திலேயே S.S. இராஜேந்திரன், சிவாஜி கணேசன் உள்ளிட்டோர் தீவிர அரசியலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். இதற்குப் பிறகு கடந்த ஐம்பதாண்டுகளில் வெவ்வேறு காலங் களில் T. ராஜேந்தர், K. பாக்யராஜ், சரத்குமார், விஜய்காந்த், கமலஹாசன், விஜய் என்று பல்வேறு நடிகர்கள் தனிக் கட்சி தொடங்கி இருக்கின்றார்கள்.

திரைப்பட நட்சத்திரங்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்பதல்ல. மக்களாட்சியில் அரசியல் கட்சி தொடங்குவதற்கு எல்லோ ருக்குமே உரிமையும் சுதந்திரமும் உண்டு. ஆனால் எந்தவிதமான கொள்கை கோட்பாடு களோ, தெளிவான அரசியல் பார்வையோ, தொலைநோக்கோ இல்லாமல் திரைப்படக் கவர்ச்சியை மட்டுமே மூலதனமாக வைத்துக் கொண்டு அதிகார பீடங்களைக் கைப்பற்றுவது எந்த வகையிலும் ஆரோக்கியமானதல்ல. தனி மனித வழிபாடு, ரசிக மனப்பான்மை, கண்மூடித்தனமான பக்தி, கட்டற்ற ஊழல், எதேச்சதிகாரம், கொள்கை விவாதங்கள் குறைந்து போதல் போன்றவற்றுக்கே அவை வழிவிடும் என்பதற்கு வரலாறே சான்று.

திரை மோகத்தில் திண்டாடும் தமிழ்நாட்டை மீட்டெடுப்பதற்காக சமூக அக்கறையும் நாட்டு நலனில் பெருங் கவலையும் கொண்ட நல் லுள்ளங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடு பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காணாமல் போன மாணவர் மன்றங்கள்

சமூக நீதிக்குக் குரல் கொடுக்கின்ற மாநி லம், மனித உரிமை பாதுகாப்புக்குப் பெயர் பெற்ற மாநிலம், அமைதிப் பூங்கா என ஏராள மான தனிச் சிறப்புகளைப் பெற்ற நம்முடைய மாநிலத்து நிலைமைகள் இன்று தலைகீழாய் ஆகியுள்ளது. அரசியல் நீக்கம் செய்யப்பட்ட மாணவர் தலைமுறை உருவாகிவிட்டதோ என்று கவலைப்படும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

ஒரு காலத்தில் மாணவர்கள்தாம் மாநிலத் தின் மனசாட்சியாய், உரிமைக் குரலாய் ஓங்கி நின்றார்கள். மாணவர் மன்றங்கள்

துடிப்புடன் செயல்பட்டன. கூர்மையான அரசியல் பார்வை, தொலை நோக்கு, செயல் துடிப்பு நிறைந்த மாணவர் போராளிகள் உருவானார்கள். அவர்களே பிற்காலத்தில் சிறப்பான அரசியல் ஆளுமைகளாகவும் மலர்ந்தார்கள். இன்று அந்த நிலைமை இல்லை.

1977இல் எம்ஜிஆரின் அதிமுக அரசு தான் முதன்முதலாக கல்லூரிகளில் மாணவர் மன்றங்களைக் கலைத்து மாணவர் மன்றத் தேர்தல்களைத் தடை செய்தது. அதன் பிறகு 1980களிலும் 1990களிலும் தேர்தல்கள் நடந்தன. இப்போது கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாகக் கல்வி வளாகங்கள் அரசியல் வாடையையும் நுகராதவையாய் முடங்கி நிற்கின்றன.

24 பல்கலைக்கழகங்கள், 29 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், 8 தனியார் பல்கலைக் கழகங்கள், 2 மத்திய பல்கலைக்கழகங்கள் என மொத்தம் 61 பல்கலைக்கழகங்கள் நம்முடைய மாநிலத்தில் இயங்கி வருகின்றன. 1600க்கும் மேற்பட்ட கலை, அறிவியல் கல்லூரிகளும் 463 பொறியியல் கல்லூரிகளுமாக இரண்டாயிரத்துக்கும் அதிகமான கல்லூரிகளும் இயங்கி வருகின்றன.

இந்தக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மாணவர் மன்றங்களும் இல்லை. அவற்றுக்கான தேர்தல்களும் நடத்தப்படுவதில்லை. இத்தனைக்கும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மாணவர் மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றே 2006இல் லிங்டோ கமிட்டி பரிந்துரைத்துள்ளது.

என்றாலும் இருபதாண்டுகளாக தேர்தல் நடத்தப்படாத அவலம் நீடிக்கின்றது. இதனால்தான் மெத்தப் படித்த சாதனை மாணவர்களும்கூட சமூக அக்கறையோ அரசியல் விழிப்பு உணர்வோ அற்றவர்களாய் ரசிக மனப்பான்மை கொண்டவர்களாய் தேங்கி நிற்கின்றார்கள். மேலும் இன்று நாடே கொண்டாடுகின்ற நேரா போஹ்ரா போன்ற மாணவப் போராளிகள் நம்முடைய மாநிலத்தில் உருவாகாமல் போனதற்கான காரணமும் இதுதான்.

லிங்டோ கமிட்டியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மாணவர் மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

அமைதிப் பூங்காவாக இருக்கின்ற நம்முடைய மாநிலத்தில் அமைதியைக் குலைக்கக்கூடிய இத்தகைய கொடூர நிகழ்வுகளை முளையிலேயே கிள்ளி எறிவது அவசியமாகும்.

மழைவெள்ளம், மண் சரிவுகள், பரிதவிக்கும் மலைப் பிரதேசங்கள்

நீலகிரி மாவட்டத்தின் பர்லியார், கீழ் கோத்தகிரி எஸ்டேட், மேட்டுப்பாளையம், கோத்தகிரி, குன்னூர், கொடைக்கானல் உள்ளிட்ட பகுதிகள் கனமழையாலும் மண் சரிவுகளாலும் பாதிக்கப்பட்டுள்ளன. 62 இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவ வசதி, பாதுகாப்பான தங்குமிடம் ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும். நிலச்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், சேதமடைந்த சாலைகள், வடிகால் வசதிகளை விரைந்து சீரமைக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். மழைநீர் வடிகால் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், வெள்ள அபாயப் பகுதிகளைக் கண்டறிதல், பேரிடர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

அரசுடன் மக்களும் இணைந்து செயல்பட்டு, உயிரிழப்புகளையும் பொருளாதாரச் சேதங்களையும் தடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

மொகலாயர்கள் அந்நியர்களா?

– சேயன் இப்ராகிம்

கடந்த மூன்று இதழ்களில் மொகலாயப் பேரரசின் சில முக்கியமான மன்னர் களின் ஆட்சி குறித்துப் பார்த்தோம். மொகலாய மன்னர்கள் குறித்து சில வலதுசாரி வரலாற்று ஆசிரியர்கள் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளை அல்லது அவதூறுகளைச் சுமத்துகின்றனர். அவையாவன:-

1. **மொகலாயர்கள் படையெடுப்பாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள்**
2. **ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காக எந்த விதமான கொடூரச் செயல்களிலும் ஈடுபடத் தயங்காதவர்கள்**
3. **அவர்கள் அந்நியர்கள்.**

இனி ஒவ்வொரு குற்றச்சாட்டாகப் பார்ப்போம்

1. படையெடுப்பாளர்கள் – ஆக்கிரமிப்பாளர்களா?

நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து ஆட்சி புரிந்த மன்னர்கள் தங்களது நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தவும் தங்களது வீரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றவும் படையெடுப்புகள் நடத்திக் கொண்டே வந்திருக்கிறார்கள். வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. கி.முவுக்கு முன்னரும், பின்னரும் உலகின் பல நாடுகள் ரோமப் பேரரசின் கீழ் இருந்தன. அதன் பின்னர் இஸ்லாமியப் பேரரசு சுமார் 1200 ஆண்டுகள் நீடித்தது.

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் கிரேக்க மன்னர் அலெக் ஸாண்டர் உலகின் பல நாடுகளின் மீது படையெடுத்து வென்று இந்தியாவின் மீதும் படையெடுத்தார். இந்தியாவில் அப்போது இருந்த மன்னர்களுக்கு இடையில் ஓயாத போர்கள் நடந்தன. அசோகர் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வென்றார். பின்னர் போரில் ஏற்பட்ட உயிரிழப்புகள் கண்டு மனம் வருந்தி போர் புரிவதைத் தவிர்த்தார் என வரலாற்றில் படிக்கிறோம்.

இந்தியாவின் வட பகுதியில் மன்னர்களுக்கு இடையில் ஏராளமான போர்கள் நடை பெற்றுள்ளன. ஹீணர்களும், குஷானர்களும் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின் மீது படையெடுத்து வந்து ஆட்சியை நிறுவியவர்கள். குஷானர்களின் கனிஷ்கர் ஒரு முக்கிய மன்னராகத் திகழ்ந்தார். ஹீணர்களுக்கும் உள்நாட்டு மக்களுக்கும் அதாவது இந்தியர்களுக்கும் பிறந்தவர்களே இன்றைக்கு வட இந்தியாவின் பல பகுதிகளில் வசிக்கின்ற ராஜபுத்திரர்கள். மொகலாயப் பேரரசர்களின் இராணுவத்தில் இந்த ராஜபுத் திரர்கள் மிகப் பெரிய பொறுப்புகளை வகித்தனர்.

தமிழ்நாடு என்று இன்றைக்கு சொல்லப்படுகின்ற அன்றைய நிலப்பரப்பில் சோழ, சேர, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஒருவருக்கொருவர் ஓயாது போர்கள் நடத்தி

வந்ததை வரலாறு பதிவு செய்திருக்கிறது. சோழ மன்னர்கள் ராஜராஜனும், அவரது புதல்வர் ராஜேந்திரனும் தொடர்ந்து போர் புரிந்து பாண்டிய, சேர நாடுகளையும் தங்களது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். ராஜேந்திர சோழன் இலங்கையைப் போரிட்டு வென்றார். கங்கைக் கரை வரை சென்றார். மலேசியா தீபகற்பத்தின் கடாரம் வரை சென்று வென்றார். இது வரலாறு தரும் செய்திகள்.

அம்மன்னரைக் கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், வட இந்திய மன்னர்களான கனகனையும், விஜயனையும் போரில் தோற்கடித்து அவர்களது தலைகளிலேயே கங்கை நீர் கொண்ட குடங்களைக் கொண்டு வரச் செய்தான் என்றெல்லாம் நாம் இன்றைக்கும் பெருமைப் பேசுகிறோமே. இவை அனைத்தும் போர்கள் நடத்தி வென்றதால் வந்த புகழ் தானே? இப்படி வரலாற்றில் ஏராளமான நிகழ்வுகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் தான் உலக அளவில் ஓர் ஒழுங்குமுறை ஏற்பட்டது. காலனி ஆட்சியிலிருந்தும், மன்னர்கள் ஆட்சியிலிருந்தும் பல நாடுகள் விடுதலை பெற்று சுயாட்சியும், இறையாண்மையும் கொண்ட நாடுகளாக மாறின. இன்றைக்கு எந்த ஒரு நாடும் இறையாண்மை கொண்ட வேறொரு நாட்டை ஆக்கிரமிப்பதில்லை. எனவே இன்றைய அரசியல் நிலையையும், பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தைய அரசியல் நிலையுடன் ஒப்புநோக்குவது ஒரு தவறான அணுகுமுறையாகும்.

அன்றைக்குப் போர் தொடுப்பதும், நாடுகளைக் கைப்பற்றுவதும் ராஜதர்மம். இன்றைக்கு அது ஆக்கிரமிப்பாகக் கருதப்படும். அன்றைக்கு உலகிலிருந்த மன்னர்கள் என்ன செய்தார்களோ அதையே மொகலாய மன்னர்களும் செய்தனர். மொகலாயர்கள் வென்ற பிறகு இந்தியாவில் தொடர்ந்து 332 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். நாளடைவில் இந்த மண்ணின் மைந்தர்களாகிப் போயினர். எனவே அவர்களை படையெடுப்பாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் எனப் பழிப்பது பொருளற்றதாகும்.



2. ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காகக் கொடூரச் செயல்களில் ஈடுபட்டவர்களா?

மொகலாய மன்னர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தந்தை, தனயன் என இரத்த உறவுகளை ஈவிரக்கமில்லாமல் கொன்றவர்கள் என்று சில வலதுசாரி வரலாற்று ஆசிரியர்கள் சித்திரிக்கின்றனர். மன்னர் ஔரங்கஜேப் தனது தந்தையான ஷாஜகானை ஆக்ரா கோட்டையில் சிறை வைத்தார், தனது மூத்த சகோதரரான தாரா ஷுக்கோவைப் போரில் கொன்றார் என்றெல்லாம் எழுதி தங்களது கருத்துக்கு வலுச் சேர்க்க முயற்சி செய்கின்றனர்.

உலகின் பல பகுதிகளில் ஆட்சி புரிந்த மிகப் பெரும்பாலான மன்னர்கள் இந்த வழி உறவுகளைக் கொல்வது வழக்கமான ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக யார் தடையாக இருந்தாலும் அது தந்தையாக இருந்தாலும், தனயனாக இருந்தாலும் சரி அவர்களைக் கொன்று விடுவார்கள் அல்லது சிறை வைப்பார்கள். இது மன்னர்களின் வழிமுறை. இதற்கு மொகலாய மன்னர்களில் சிலர் விதிவிலக்காக இல்லை என்பதே உண்மை. மன்னர்கள் தங்களது ஆட்சி அதிகாரத்திற்குத் தடையாக இருந்தவர்களைக் கொன்று குவித்த வரலாறு இந்தியாவிலேயே நிறைய உண்டு. சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

(1) மகதப் பேரரசின் இரண்டாவது மன்னன் அஜாத சத்ரு தனது தந்தை பிம்பி சாகரனைக் கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தான்.

(2) புத்தர் காலத்தில் கோசல நாட்டு மன்னன் பிரசஞ்சிட்டைக் கொன்று விட்டு அவன் மகன் விதுதபா ஆட்சியேறினான்.

(3) பிந்துசாரனின் மகன் அசோகன் தனது சகோதரர்கள் அனைவரையுமே கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தான்.

(4) மௌரிய மன்னனான பிருகத்தனைக் கொன்று விட்டு அவனது படைத் தளபதி புஷ்யமித்திரன் பட்டம் சூடினான்.

(5) கங்க மரபின் தேவ பூபதி என்ற மன்னனை அவனது அமைச்சரான வாசுதேவ கன்கர் என்ற பிராமணன் கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தான்.

(6) குப்தப் பேரரசின் இராமகுப்தன் என்ற மன்னனை அவனது தம்பி இரண்டாம் சந்திர குப்தன் கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தான், அண்ணனின் மனைவியையும் மணந்து கொண்டான்.

(7) விஜயநகரப் பேரரசின் அரசன் இரண்டாம் விருப்பாட்சனை அவனது மூத்த மகன் கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தான்.

(8) சோழப் பேரரசில் சுந்தரச் சோழனின் ஆட்சியின் போது பட்டத்திற்கு வரவேண்டிய ஆதித்த கரிகாலன் மர்மமான முறையில் கொல்லப்பட்டான். இதனாலேயே அவரது தம்பி ராஜராஜ சோழன் ஆட்சிக்கு வர நேர்ந்தது.

(9) குலசேகரப் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் தனது வைப்பாட்டியின் மகனான வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தத் திட்டமிட்டான். ஆனால் பட்டத்து ராணியின் மகன் சுந்தரபாண்டியன் தனது தந்தை குலசேகரப் பாண்டியனைக் கொன்று விட்டு அரியணை ஏறினான்.

இப்படி இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலும் ஏராளமான நிகழ்வுகள் உள்ளன. ஆட்சியில் அமர்வதற்காகப் பிறந்த பிள்ளையைக் கொல்வது கூட ராஜதர்மமே என அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியர் கூறுகின்றார். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மன்னர்கள் எந்த விதமான பாதகச் செயல்களையும் செய்யத் தயாராகவே இருந்தனர் என்பது வரலாறு நமக்குத் தரும் செய்தியாகும். இந்த நிலையில் சில மொகலாய மன்னர்களும் அத்தகைய செயல்களில் ஈடுபட்டதில் வியப்பில்லை, அது மன்னர்களுக்குரிய தர்மமேயாகும். எனவே மொகலாய மன்னர்களை மட்டும் தனியே பிரித்துப் பார்த்து இவர்கள் படுபாதகம் செய்ய அஞ்சாதவர்கள் என்று குற்றம்

சாட்டுவது அவர்கள் இஸ்லாமியர்கள் என்ப தற்காகவே திட்டமிட்டுச் செய்கின்ற அவ தூறாகும்.

மொகலாயர்கள் அந்நியர்களா?

மொகலாய மன்னர்கள் கிட்டத்தட்ட (1526ஆம் ஆண்டிலிருந்து 1858 ஆம் ஆண்டு வரை) 332 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தனர். பாபர் முதல் பகதூர் ஷா வரை, மன்னர்களும் அவர்களது சந்ததியினருமே இந்தியாவையே தங்களது நிரந்தர வாழ்விட மாகக் கொண்டிருந்தனர். இங்கேயே திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு இந்த நாட்டு மக்களோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். எனினும் இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்கள் மொகலாய மன்னர்கள் அந்நியர்கள் என்றே குறிப்பிடுகின்றனர்.


மொகலாய மன்னர்களின் வரலாற்றை பாடப்புத்தகங்களிலிருந்து நீக்கி விட்டனர். ஆனால் மொகலாயர்கள் அந்நியர்கள் அல்ல; அவர்கள் இந்த நாட்டின் மக்களே என்று விடுதலைப் போராட்ட வீரரும், பஞ்சாப் சிங்கம் என அழைக்கப்பட்டவருமான லாலா லஜபதி ராய் தான் எழுதியுள்ள 'யுவபாரதம் அல்லது இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

அவரது நூலில் இடம் பெற்றுள்ள சில கருத்துகளைப் பார்ப்போம், '..எனினும் இந்தியாவை ஆண்ட முஸ்லிம் ஆட்சியை அந்நிய ஆட்சி என்று சொல்வது சரியா காது. முதன் முதலில் படையெடுத்து வந்த இஸ்லாமியர்கள் அந்நியர்கள் என்பதில் ஐய மில்லை. ஆனால் அவர்கள் இந்தியாவில் குடியேறி இந்தியாவையே தாய் நாடாகக் கொண்டு இங்கேயே வீடு வாசல்கள் கட்டி, கல்யாணம் செய்து குழந்தை பெற்று வளர்த்து வந்தவர்களாதலால் இந்த நாட்டைச் சேர்ந்த புதல்வர்கள் ஆகிவிட்டனர்.

.... பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய வரை யில் இந்தியாவில் அரசியல் அதிகாரம் வகித்த முஸ்லிம்கள் இந்தியர்களே ஆவர். அவர்கள் பிறந்தது இந்தியாவில். அவர்கள் மணம் புரிந்தது இந்தியாவில், அவர்கள் இறந் ததும் புதைக்கப்பட்டதும் இந்தியாவிலேயே. அவர்கள் வசூலித்த பணத்தின் ஒவ்வொரு காசும் இந்தியாவிலேயே செலவழிக்கப் பட்டது. அவர்களது இராணுவமும் முற்றி லுமே இந்திய இராணுவமேயாகும்.

.... ஷெர்ஷா, அக்பர், ஜஹாங்கீர், ஷாஜ கான் முதலிய மன்னர்களின் ஆட்சியில் அரசு குடும்பத்தைச் சார்ந்த இளவரசர்களுக்கு அடுத்த படியாக பெரிய உத்தியோகப் பதவிகள் எல்லாவற்றுக்கும் இந்துக்களே உரியவர்களாக இருந்தனர். அவர்கள் மாகாண அதிகாரிகளாகவும், இராணுவத் தளபதிகளா கவும், ஜில்லா அதிகாரிகளாகவும் பதவி வகித்திருக்கின்றனர். சுருங்கக் கூறின் அரசுத் துறையிலோ, அரசியல் துறையிலோ, சமூகத் துறையிலோ இந்து முஸ்லிம்களுக்குள் எந்த வேற்றுமையும் பாராட்டப்படவில்லை. அரசி யலையும், பொருளாதாரத்தையும் பொறுத்த வரையில் இந்து அரசனைப் போலவே, இஸ்லாம் அரசும் சுதேச ஆட்சியாகும்.

... பொதுமக்களை நிராயுத பாணிகளாக்க முஸ்லிம்கள் முயன்றது இல்லை. ஆயுதங்கள் உற்பத்தியையோ, இறக்குமதியையோ அவர்கள் தடை செய்ததில்லை. அரேபியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானிலிருந்து அவர்கள்



உத்தியோகஸ்தர்களைக் கொண்டு வர வில்லை. லங்காஷயர் தொழில்களைப் போல அவர்கள் பாதுகாக்க வேண்டிய அந்நிய நாட்டுத் தொழில் எதுவும் இல்லை. இந்தியா வில் செய்த சாமான்களுக்கு வரி விதிக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்பட வில்லை.

... இந்தியாவின் பழங்கதைகளிலிருந்தும், பிற ஆராய்ச்சிகளிலுமிருந்தும் வெளியாகும் ஜனங்களின் பழக்க வழக்கங்களைக் கவனித் தால் இரு சமூகங்களும் ஒன்றோடொன்று எவ்வளவு தூரம் கலந்து பழகியிருக்கின்றனர் என்பது நன்கு புலனாகும். முஸ்லிம்கள் வெளிநாடுகளில் வைத்துக் கொண்டிருந்த ஒரே தொடர்பு சமயச் சார்பான தொடர்பே யாகும். இத்தொடர்பை அவர்கள் வைத்துக் கொள்ளாதிருக்க முடியாது என்று சொல்ல வேண்டியதில்லை. இதுகாறும் நாம் செய்த சரித்திர ஆராய்ச்சியின் சாராம்சத்தைப் பொருள் பொதிந்த இரண்டே வார்த்தைக ளில் சுருங்கக் கூறி விளங்க வைக்கலாம். 'இந்திய முஸ்லிம்கள்' என்பதே அவ் வார்த் தைகளாகும்..' (பக்கம் 88,89) லாலா லஜபதிராயின் இந்தக் கூற்றுக்கு பிறகு அதிக மாக நாம் கூற ஒன்றும் கூற வேண்டிய தில்லை.

மொகலாயர்களின் ஆட்சியும் மாட்சியும்

மொகலாயர்கள் ஒரு மிகச் சிறந்த நிர்வாக முறையை உருவாக்கி இருந்தனர். இன்றைய இந்தியாவின் நிர்வாக அமைப்புகளான பஞ்சாயத்து, தாலுகா, ஜில்லா ஆகியவற்றை உருவாக்கியவர்கள் அவர்களே. நீதிமன்ற நடைமுறைகளும் அவர்கள் காலத்தில் உரு வாக்கப்பட்டவைகளேயாகும். ஒரு மிகச் சிறந்த நிலவரிக் கொள்கையை மொகலாய மன்னர்கள் கடைப்பிடித்தனர். பெரும்பான் மையான இந்து மக்களின் சமய உரிமைகள் பாதுகாக்கப் பட்டன. அவர்களின் வழி பாட்டு உரிமைகள், பழக்க வழக்கங்கள் தடை செய்யப்படவில்லை. மொகலாய மன்னர் களுக்கு எதிராக இந்துக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டதாக வரலாற்றில் குறிப்புகள் எதுவு மில்லை.

இந்துக்களின் கலை, இலக்கிய வடிவங்கள் தடை செய்யப்படவில்லை. அவை செழித்து வளர்ந்தன. இந்துக்களின் புராணங்களும், காவியங்களும் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. பொதுப் போக்குவரத் திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. சாலைகள் பெருமளவில் போடப் பட்டன. கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பல பொது நூலகங்கள் நாடெங்கும் தொடங்கப்பட்டன.

மொகலாயர் ஆட்சி இஸ்லாமிய ஷரியத் தின்படி நடைபெற்ற ஆட்சி அல்ல. மன்னர்கள் முஸ்லிம்களாக இருந்தனர். அவ்வளவுதான். ஓரிரு நிகழ்வுகள் தவிர, பல மொகலாய மன்னர்கள் ஆடம்பரமாகவே வாழ்ந்தனர். சுக போகங்களில் திளைத்தனர். எனினும் எந்த ஒரு மொகலாய மன்னரையும் கொடுங்கோலர் என வரலாறு பதிவு செய்ய வில்லை.

மொகலாயப் பேரரசு நிறுவப்பட்டு 500 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அந்தப் பேரரசு குறித்து முஸ்லிம்களுக்கு எந்தப் பெருமிதமும் இல்லை. அதே நேரத் தில் அவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே கார ணத்திற்காக இன்றைய ஆட்சியாளர்கள் அவர்களைத் தூற்றுவதும், பாடப் புத்தகங் களிலிருந்து அவர்களது வரலாற்றை நீக்குவ தும் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, பெரும் பான்மையான இந்து சமய மக்களுக்கே ஏற்புடையதாக இல்லை.

இந்தியாவை ஆண்ட பல மன்னர்களைப் போலவே அவர்களது வரலாறும் இடம் பெற வேண்டும். வரலாற்றை மறைக்கவோ அல்லது திரிக்கவோ எந்த ஒரு செயலையும் ஒரு நாகரிக அரசு செய்யாது. ஆனால் அதைச் செய்ய இன்றைய இந்திய ஆட்சி யாளர்கள் முயல்கின்றனர். அவர்களை வர லாறு ஒருபோதும் மன்னிக்காது என்பது மட்டும் திண்ணம்.

சமரசம் புதிர் போட்டி 22

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 நவம்பர் 30ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றி லிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.
- ஒருவரே பல எண்களிலிருந்தும், மின்னஞ்சலிலிருந்தும் வெவ்வேறு பெயர்களில் அனுப்புவதைத் தவிர்க்கவும். அவ்வாறு அனுப்பும் பட்சத்தில் ஒருவர் மட்டுமே போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

1. 'இறைநம்பிக்கை கொண்டோரே! நீங்கள் உண்மையில் நம்பிக்கையாளராக இருப்பின் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (உங்களுக்கு வர வேண்டிய) வட்டிப் பாக்கிகளை விட்டு விடுங்கள். ஆனால், அவ்வாறு நீங்கள் செய்யா விடின், அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் (உங்களுக்கு எதிராக) போர் அறிவிக்கப்பட்டு விட்டதென்பதை அறிந்துகொள் ளுங்கள். (இப்பொழுதும்கூட) நீங்கள் பாவ மன்னிப்புக்கோரி (வட்டியைக் கைவிட்டு) விட்டால் உங்களுடைய மூலதனம் உங்களுக்கே உரியது. நீங்கள் அநீதி இழைக்கக்கூடாது. உங்கள் மீதும் அநீதி இழைக்கப்படக் கூடாது.' இந்த வசனங்கள் இடம் பெற்ற திருக் குர்ஆன் அத்தியாயம்

அ) அல்பகறா ஆ) ஆலு இம்ரான்

2. 'என் உயிர் எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! நான் அறிந்திருப் பதை நீங்கள் அறிந்து கொண்டீர்களானால் அதிகமாக அழுவீர்கள், குறைவாகச் சிரிப்பீர்கள்' என்ற நபிமொழியை அறிவித்தவர்

அ) இப்னு மஸ்வூத்(ரலி) ஆ) அபூஹுரைரா(ரலி)

3. வீட்டு வசதி, நில உரிமைகள் தொடர்பியல் (HLRN) அறிக்கையில் பாஜக ஆட்சியில் புல்டோசர் களால் இடித்துத் தள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட் டுள்ள வீடுகளின் எண்ணிக்கை

அ) 7 இலட்சம் ஆ) 1.5 இலட்சம்

4. அயர்லாந்தின் மனித உரிமைப் பாதுகாவலர்களுக் கான விருது வழங்கப்பட்ட மாணவப் போராளி

அ) சர்ஜில் இமாம் ஆ) உமர் காலித்

5. அமெரிக்க செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள முதல் முஸ்லிம்

அ) அப்துல் எல் சயீத் ஆ) ஜோஹ்ரான் மம்தானி

6. அக்கரைப் பச்சை நாவலில் இடம்பெற்ற முக்கிய கதாபாத்திரத்தின் பெயர்

அ) சாலிஹா ஆ) ஜரினா ஜமால்

7. நோபல் பரிசு தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1901 ஆ)1895

8. History of the Earth's Formation நூலை எழுதியவர்

அ) பிரெட் ஹாய்லே ஆ) எம்.இ.வால்ராத்

புதிர் போட்டி இருபதுக்கான விடைகள்

1. அ) அபூஹுரைரா(ரலி) 2. அ) அறுநூறு இறக்கைகள் 3. ஆ) ஏற்கனவே இயங்கும் நிறுவனத்தை விரிவு செய்வது 4. ஆ) யோரான் வான் கிளாவரென் 5. அ) பி.தியாக ராயர் செட்டியார் 6. ஆ) பாப் அல்மந்தப் 7. அ) அக்டோபர் முதல் வெள்ளிக் கிழமை 8. ஆ) இரண்டாம் பகதூர் ஷா 9. அ) ரபி எல் ஹானான் பெக் 10. அ) 2.47 இலட்சம் கோடி

குறிப்பு: புதிர் போட்டி இருபதில் கேள்வி எண் 5 மதிய உணவுத் திட்டம் என்பதற்குப் பதில் காலை உணவுத் திட்டம் என்று தவறாக இடம்பெற்றிருப்பதால் அந்தக் கேள்விக்கான விடை இப்போட்டியில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

சரியான விடையை எழுதியவர்கள்:

1. S.A. அமீர் அலீ, கிள்ளை 2. G. அன்பழகன், ஆற்காடு 3. சோழா புகழேந்தி, கரியமாணிக்கம் 4. M. சாஜித், திரு நறையூர் 5. G.கிருஷ்ணன், ஆற்காடு 6. V.S. சம்சுத்தீன் ஃபைஜி, கடையநல்லூர் 7. பரீதா சேகு முஹைதீன், சென்னை 8. கமர் சுல்தானா, கோவை 9. T.A. அயானா, கடையநல்லூர் 10. ஹ.ஷாஹுல் ஹமீது, கொரக்கவாடி 11. ஸ்ரீமதி, மஞ்சக் குப்பம் 12. செய்யது ஜுபைர், தர்மபுரி 13. தஸ்லீமா பிலால், திருப்பூர் 14. ந.அனிபா, நாமக்கல் 15. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 16. ஷிஃபா, ஏரல் 17. முஹம்மது உவைஸ், ஏர்வாடி 18. பிர்தௌஸ், திருநெல்வேலி 19. நூர்ஜஹான், ஏர்வாடி 20. P.P. யூசுஃப் ஹஸன், கடையநல்லூர் 21. H. நபிசா, சென்னை 22. கவுஸ்மீரான் அப்துல் கரீம், திருநெல்வேலி 23. ராபியா, துவரங்குறிச்சி 24. கீஸ்வர் மஸ்ஹருதீன், வேலூர் 25. அ. மஹ்மூதா பீவி, வண்டலூர்

பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

H. நபிசா, சென்னை

அகன்ற நேர்த்தியான சாலையின் இரு மருங்கிலும் சிகை செதுக்கிய மரங்கள் சூழ அதிவேகத்தில் ஜெத்தா நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தேன். இதயம் வாழ்வில் என்றும் காணாத நிறைவுடன் இருந்தது. இஸ்லாமியர் அனைவரும் ஆவல் கொள்ளும் ஹஜ் கடமையை முடித்த நிறைவுதான் இது.

பட்டாடை உடுத்திய பாலைவன மணற்பரப்பின் முந்தானையாகச் செங்கடலெனும் நீளக் கடற்கரை, அருகிலேயே தாயிஃப் எனும் மலைப் பகுதி இதயத்தைக் குளிர வைக்கும் மக்கா நகர இறையில்லம் என ஜெத்தா அழகிய அமைதிசூழ் மாநகரம். இங்கு வாழ்வதும் வரம்தான் என உள்ளூர நினைக்க வைத்தது.

ஜெத்தாவில் இருக்கும் வீட்டிற்குள் நுழைந்தோம். நண்பனின் மகள் ஆயிஷா தனது புது ஆடையைத் தோழியிடம் காண்பித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். இருவரும் ஹிந்தி மொழியில் பேசிக் கொண்டிருந்தனர். நான் அதை வியந்து பார்த்தேன். என் பார்வை யைப் புரிந்த நண்பன், 'என் பக்கத்து வீட்டில் இருக்கும் பாகிஸ்தான் நண்பரின் மகள் மாஹிராவுக்கும் என் மகள் ஆயிஷாவிற்கும் ஒரே வயதுதான்' என்றான்.

'எப்படி அவர்களோடு ஒத்துப்போகிறது?' என வினவினேன் என் புருவங்களை உயர்த்தியவாறு.

நண்பனின் மனைவி மர்யம், 'அண்ணா, இங்கு மனிதர்கள் யார் எந்த நாடு என்ற விளக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை; மாறாக மனித நேயம் ஒன்றையே கொண்டு சகோதரர்களாக வாழ்கிறோம். இதை நீங்கள் மக்காவில் உம்ரா செய்யும் போதே உணர்ந்திருப்பீர்களே! ஆயிஷாவைக் கருவுற்றிருக்கும் நேரம் பிரசவ வலி ஏற்பட்ட நேரத்தில் உங்கள் நண்பர் எங்களுடன் இல்லை; வேலை விஷயமாக அபஹா

யாவரும் கேளிர்

- பானு ஹமீத்



சென்றிருந்தார். 15 நாள்களுக்கு முன்பே திடீரென வலி ஏற்படவும், மாஹிராவின் பெற்றோர்கள்தான் அனைத்து உதவிகளை யும் செய்தனர்' என்றார்.

சிறிது நேரத்தில் மற்றொரு குழந்தை மரு தாணி இடத் தனது தாயார் அழைக்கிறார் என இரு சிறுமிகளையும் உருது மொழியில் பேசி அழைத்தார். 'மாமா, இவளும் என் தோழி சனா, உத்தரப்பிரதேசம் இவர்களின் ஊர்' என்று சிரித்துக் கொண்டே சென்றாள் ஆயிஷா.

ஊருக்குத் தேவையான பொருட்களை வாங்கச் சென்றோம். ஹஜ் பெருநாளுக்காகப் புதுக்கோலம் கொண்டிருந்த பலத் நகரம் தோரணங்களோடு எங்களை வரவேற்றது. கடைவீதிகளில் தொழுகைக்கான அழைப்புக் கொடுத்ததும் அப்படியே கடைகளை விட்டு விட்டு இறைவனை வணங்கச் செல்கிறார்கள் கடைக்காரர்கள். மக்களும் அவர்களை மதித்து மிகவும் நேர்மையாக நடப்பது இன்னும் பூரிப் பைத் தந்தது. 'கடினமான சட்டங்களே இந்த சுய ஒழுங்கினை உருவாக்கியது' என்றான் நண்பன்.

'நான் விடுமுறையில் ஊருக்கு வரும் பொழுது வீட்டுச்சாவி, வாகனம் ஆகியவற்றை நண்பர்களிடம் தான் ஒப்படைத்துவிட்டு வரு வேன்' என நண்பன் அண்டை வீட்டாரான பாகிஸ்தான் நண்பரைத்தான் குறிப்பிட்டான்.

'இதுதான் மனிதகுல அன்னை ஹவ்வா (அலை) அவர்களின் அடக்கத்தலம் பார்த்துக் கொள். இதனால்தான் இந்த ஊர் ஜெத்தா அதாவது 'தாய்' எனப் பொருள்படும் பெயர் கொண்டது' என்றான்.

வழியில் சாலையின் ஓரங்களில் மனித உருவங்கள் இல்லாமல் புத்தகம், சைக்கிள் போன்று விதவிதமான சிலைகள் அழகிற் காகவும், சில அர்த்தங்களோடும் அமைக்கப் பட்டிருந்தது காணப் புதுமையாக இருந்தது. மாலையில் கடற்கரைக்குச் சென்றோம். இங்கும் நம் ஊர் நாட்டுப்புறக் கலைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடப்பது பூர்விக பந்தம் இருந்ததைப் பறைசாற்றியது. வழியில் மனிதர்கள் சாலைகளைக் கடக்க முற்படும் போதெல்லாம் நண்பன் வாகனத்தை நிறுத்தி நிறுத்தி அவர்களுக்கு வழிவிடுவது எனக்குப் புதுமையான அனுபவமாக இருந்தது.

'நம்மைவிட எளியோரை உணரவும், மதிக்கவும் வேண்டும் என்பதே இஸ்லாம் தரும் அழகிய பாடம். இது போன்ற நல்ல விஷயங்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப் பதுதான் இந்த நாட்டின் செழிப்பின் ரகசியம் என நான் நம்புகிறேன்' என நண்பன் சொன் னதில் அர்த்தம் இருப்பதாகவே பட்டது.

'ஜெத்தா மக்கள் அனைவரும் இங்குதான் இருக்கிறார்களோ?' என எண்ணும் வண்ணம் மக்களின் கூட்டத்தைப் பார்த்தேன். மிதி வண்டிகள் ஓட்ட, நடப்பவர்களுக்கு எனத் தனிச் சாலை, குழந்தைகளோடு குடும்பங்கள் நம் ஊரிலும் பார்ப்பதுதான், ஆனால் இங்கே உலக மக்கள் அனைவரையும் பார்க்க முடிவது தான் மலைப்பான அனுபவமாக இருந்தது.

'மனிதன் மனிதநேயத்தோடு இருக்கும் வரை இதயங்கள் இணைவதில் என்ன தடை இருக்கிறது? இந்த அழகிய உலகினை உரு வாக்கவே இஸ்லாம் வழிகாட்டுகிறது' எனச் சரியாகச் சொன்னான் நண்பன்.

அப்பப்பா! ஆதமின் மக்களை ஒன்றாகப் பார்க்கும் உலக மக்கள் சங்கமம் அதிசயம், அற்புதம்தான்! எந்த ஒரு பேதமும் இல் லாமல் உலக மக்கள் அனைவரும் அன்பின் மொழியில் முகமன் கூறுவதும், இனிப்பு களைப் பரிமாறுவதும் உண்மையில் அது வரை காணாத நிறைவைத் தந்தது.

அகிலங்களைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவன் முன்பு நாம் எந்த உயர்வில் இருந் தாலும் அவன் முன்பு அடிமைதான் என அறிய வைத்தமைக்கும், மனிதர்கள் பிற மனிதர்களுக்கு அடிமையில்லை எனப் புரிய வைத்தமைக்கும் நன்றி.

உலகமே இவ்வாறு மாறிவிட்டால் எவ் வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணத் தோடு பிரியா விடை கொண்டு நண்பனையும் ஜெத்தா நகரையும் விட்டு நெகிழ்ச்சி கொண்ட இதயத்தோடு தாயகம் திரும்பினேன்.

இரக்கம்



● முனைவர்
சா. முகமது சைபுல்லாஹ்
உதவிப் பேராசிரியர், அரபுத் துறை,
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி

இரக்கம் நாம் சொல்லும் கதையல்ல
நம் உள்ளத்தில் மலரும் அன்பின் தென்றல்
நம் உயிரைத் தழைக்கச் செய்யும்
அழகிய மனிதநேய உணர்வு

இரக்கம் ஓர் ஆழ்கடல்
அதற்கு கரைகளே இல்லை
அதன் இனிமையை ஒரு முறை உணர்ந்தவர்
அதன் அன்பில் என்றும் திளைத்திடுவார்

இரக்கமும் கருணையும் அமைதியும்
உள்ளங்களை உயர்த்துகின்றன
அதன் வழியே மனிதப் பண்புகள்
மேலும் தூய்மையடைகின்றன

இரக்கம் பொழியும் கருணை மழை
நம் இதயத்தை நனைத்து
அதன் உள்ளத்தில் இனிமையை
ஊற்றெடுக்கச் செய்கிறது

இரக்கம் இதயத்தில் குடியேறினால்
அந்த உள்ளமே மாறிவிடும்
அதன் அருளால் சாதாரண மண்ணும்
புதையலாக மாறிவிடும்

இரக்கம் ஒரு பறவை போன்றது
அது பாதுகாப்பான கூட்டில்தான் தங்கும்
இரக்கமே இந்தப் பிரபஞ்சத்தின் இரகசியம்

இரக்கத்தின் ஏக்கம் அதன் நிழல்
அதனால் வாழ்க்கை இனிமையாகி
நம் உள்ளத்தையே
மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது

இரக்கம் வந்தால் பாலை நிலமும்
பசுமையான சோலையாக மாறும்
அதன் இனிமையில் நாம்
கவலைகளையே மறந்து விடுகிறோம்

இரக்கத்தின் சிறப்புகளை
எண்ணிப் பார்த்தால் அவை முடிவதில்லை
அதன் மகத்துவத்தால் மன்னர்கள்கூட
எல்லைகளைக் கடந்து சென்றுள்ளனர்

இரக்கம் காட்டுங்கள்
இரக்கமே அழகிய அருட்கொடை
அதன் துணையால் வாழ்க்கை
என்றென்றும் மகிழ்ச்சியாகிறது

குட்டீஸ், விலங்குகள் தங்களுடைய இருப்பிடங்களைச் அடைய வழி கண்டுபிடியுங்களேன்..!



வார்த்தை விளையாட்டு

சிதறிக் கிடக்கும் எழுத்துகளை ஒழுங்குபடுத்தி சரியான சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

அடுத்து வட்டத்துக்குள் இருக்கும் எழுத்து களைக் கொண்டு தமிழ்நாட்டு நகரங்களில் ஒன்றைக் கண்டுபிடியுங்கள்.

ய்	செ	தி
●		

ம	ன	ன்	ன்
	●		

ன்	அ	னை
●		

விடை : அடுத்த இதழில்..

கடந்த இதழ் வார்த்தை விளையாட்டிற்கான விடை : திருச்சி

சித்திரம் பேசுது..!



ச.ஞா.மௌலிநிலா, 1 ஆம் வகுப்பு,
எவர் கிரீன் நர்சரி பிரைமரி பள்ளி,
இண்டூர், தருமபுரி



Hidayah sabeer Ahamed,
7th grade, New Indian school,
Bahrain

அன்புச் செல்லங்களே..! இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்
IFT லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012

ஃபலஸ்தீனின் தங்க மங்கை மரியம் பிஷாரத்



17 வயதான ஃபலஸ்தீன கராத்தே வீராங்கனையான மர்யம் பிஷாரத் (Maryam Bisharat) போலந்தின் பியெல்ஸ்கோ - பியாலாவில் (Bielsko - Biala, Poland) நடைபெற்ற 2026 உலக கேடட், ஜூனியர் U21 கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில்(World Cadet, Junior U21 Championships) தங்கம் வென்று உலக சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டார். 114 நாடுகளைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்களை ஒன்றிணைத்த உலக கராத்தே கூட்டமைப்பில் இந்த வெற்றிக் கொடியை நாட்டியிருக்கிறார் பிஷாரத்.

அக்டோபர் 17 அன்று ஜூனியர் பெண்களுக்கான 66 கிலோ எடைப் பிரிவுக்கு உட்பட்ட குமித்தே (kumite) இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் நோவா லோபஸ் கோன்சாலஸை (Noa López González) 3-1 என்ற கணக்கில் வீழ்த்தி பிஷாரத் இப்பட்டத்தை வென்றார். இந்த வெற்றியின் மூலம் 2024ஆம் ஆண்டில் அவர் முதன்முதலில் கைப்பற்றிய உலக சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டார். விளையாட்டில் வளர்ந்து வரும் திறமையாளர்களில் அவரது இடம் தற்செயலானது அல்ல என்பதை இது நிரூபிக்கிறது.

தங்கம் வெல்வதற்கான பயணம் சவால்கள் நிறைந்தது. அரையிறுதியில் ஜப்பானின் வகானா காரிகோமியை (Wakana Karikomi) எதிர்கொண்ட பிஷாரத் மிகவும் நெருக்கமாகப் போட்டியிடப்பட்ட 8-7 என்ற கணக்கில் தனது எதிராளியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இத்தாலியின் வெனிஸ்-ஜெசோலோவில் நடைபெற்ற உலக கேடட், ஜூனியர், U21 சாம்பியன்ஷிப் போட்டிகளில் கேடட் பெண்களுக்கான குமித்தே 61 கிலோவுக்கு மேற்பட்ட எடைப்பிரிவில் தங்கம் வென்றபோது, பிஷாரத் 2024ஆம் ஆண்டில் உலக அரங்கில் முதன்முதலில் தனது முத்திரையைப் பதித்தார். இறுதிப்போட்டியில் எகிப்தின் ரோவா முஹம்மதை (Roaa Mohamed) 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி உலக சாம்பியன் ஆனார்.

அதன்பிறகு ஆசிய சாம்பியன்ஷிப், கராத்தே 1 யூத் லீக் உள்ளிட்ட சர்வதேசப் போட்டிகளில் பிஷாரத் தொடர்ந்து தனது சாதனையை வளர்த்து வருகிறார். சர்வதேச கராத்தே கூட்டமைப்பின்(WKF) ஜூனியர் பெண்களுக்கான பிரிவில் மர்யம் பிஷாரத் உலகில் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

2009 ஜூன் 24 அன்று ஃபலஸ்தீனின் நப்லஸ்(Nablus) நகரில் பிறந்த மர்யம் பிஷாரத்திற்கு அவரது தந்தையே முதன்மைப் பயிற்சியாளராகவும் ஆதரவாளராகவும் இருந்து வழிநடத்துகிறார். மிகவும் சவாலான சூழ்நிலைகளிலும் தனது விடாமுயற்சியால் உலக அரங்கில் ஃபலஸ்தீனக் கொடியை உயரப் பறக்கச் செய்து பல இளம் பெண்களுக்கு பெரும் உத்வேகமாகத் திகழ்கிறார் மர்யம் பிஷாரத்.

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

YOUR E-COMMERCE, OUR EXPERTISE

WE NOW ACCEPT
TO PAY & COD
BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"





SAFE & SECURE DELIVERY

FAST & RELIABLE

NATIONWIDE NETWORK

TRUSTED BY BUSINESSES

Priority

Follow Us On :

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 30 NOVEMBER 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

- மக்களுக்கு தீங்கு செய்யாமல் இருங்கள். ஏனெனில், அதுவும் நீங்கள் உங்களுக்குச் செய்து கொள்ளும் ஒரு நல்லறம் ஆகும்.

  – முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611

If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**